Australian Aid

Skills for Inclusive Growth

TVEC

நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி மட்டங்களை விட அவை எட்டப்படும் வழிவகைகளே முக்கியமானவை!

# மாற்றுத்திறனாளிகளை உள்வாங்குதல் தொடர்பான கையேடு:

## NVQ மட்டங்களை இறுதி மதிப்பீட்டின் போது பயிற்சிபெறும் மாற்றுத்திறனாளிகளுக்காக வழங்கப்படும் பொருத்தமான

# மாற்று ஒழுங்குகள்

*TVET முறைமையில் மாற்றுத்திறனாளிகளின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு.*

**தொடர்பு கொள்ள வேண்டிய நபர்**

∴பர்ஹீன் குர்ரம் - ஒப்பந்த பிரதிநிதி
ஸ்கோப் குளோபல்
நிலை 5, 12 பிரி ஸ்ட்ரீட், அடிலெய்ட், SA, 5000, ஆஸ்திரேலியா
தொலைபேசி: +61 8 7082 1431
Farheen.Khurrum@scopeglobal.com

**பதிப்புரிமை**

இந்த ஆவணத்தின் பதிப்புரிமை ஸ்கோப் குளோபல் பிரைவேட் லிமிடெட்டிற்கு உரியதாகும். பங்கேற்பாளரின் உள்ளக பயன்பாட்டைத் தவிர ஸ்கோப் குளோபல் தனியார் நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த ஆவணத்தினை முழுமையாக அல்லது ஒரு பகுதியினைப் பிரதி பண்ணுவது தடை செய்யப்பட்டதாகும். ஸ்கோப் குளோபல் தனியார் நிறுவனத்துடன் பணி புரிவதற்கான ஒப்பந்த நோக்கத்துடன் ஆய்வு மற்றும் மதிப்பீடு நோக்கங்களுக்காக மட்டுமே இது பயன்படுத்தப்படலாம்.

ஸ்கோப் குளோபல் தனியார் நிறவனத்தின் அனுமதியின்றி இந்த ஆவணம் அல்லது இதன் எந்தவொரு பரிந்துரைகள், தகவல், விடயம் அல்லது உள்ளடக்கம் வேறு எந்த நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படக் கூடாது.

பதிப்பு V1.0 (ஒக்டோபர் 2020)

Certified System
Quality
ISO 9001
SAI GLOBAL

# முன்னுரை




அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முன்னெடுப்பான உள்வாங்கும் வளர்ச்சிக்கான திறன்கள் திட்டம் (The Skills for Inclusive Growth Project (S4IG)) திறன்கள் அமைச்சு மற்றும் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு என்பவற்றின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் திட்டமாகும். உள்வாங்கும் வளர்ச்சிக்கான திறன்கள் திட்டமானது சுற்றுலா பெறுமதிச் சங்கிலியில் பணி மேற்கொள்ள உள்ளவர்கள் அத்துறைக்கு அவசியமான திறன்களைப் பெறுவதை வேலை வழங்குனர்கள் உறுதி செய்து கொள்வதற்காக திறன் விருத்தியை மீள் நிலைப்படுத்தல் மற்றும் பயிற்சியளித்தல் அணுகுமுறைகளை வலுப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் மூலம் மேம்படுத்தப்பட்ட வேலை வெளியீடுகள் மற்றும் பயிலுனர்களின் வருமான மட்ட அதிகரிப்பு என்பன எட்டப்படலாம்.

இலங்கையில் திறன் விருத்தி மற்றும் மாற்றுத்திறன் கொண்ட நபர்களின் அங்கீகாரம் அத்துடன் வேலைவாய்ப்பு என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் நாம் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் (TVEC) இணைந்து பணியாற்றுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். மாற்றுத்திறன் கொண்ட நபர்களின் திறன் அங்கீகாரம் மற்றும் மேம்பாடு என்பவற்றுக்கான அணுகலை உறுதி செய்யும் வழிகாட்டல்களை பின்பற்றுவதன் ஊடாக மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு நேர்மறையான முறைமை மாற்றங்களை இயலுமாக்குவதற்கான தலைமைத்துவத்தை வழங்கியுள்ளது. திறன் விருத்தி முறைமையை வேலை வெளியீடுகளுடன் இணைக்கும் இந்த மாற்றங்கள் அனைத்து இலங்கையர்களும் வளமடைவதை உறுதி செய்யும். கடந்த காலத்தில் மாற்றுத்திறன் கொண்ட நபர் ஒருவர் திறன் விருத்திச் சேவைகளுக்கான அணுகலைப் பெற்றுக் கொள்வது அல்லது அவரின் திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுவது அநேகமான சந்தர்ப்பங்களில் இயலாத விடயமாகவே காணப்பட்டது. இந்நிலை

காரணமாக பணிச் சந்தையில் நன்மை பயக்கும் வேலைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தமது விருப்பு மற்றும் திறமைகளை பணி வழங்குநர்களுக்கு காண்பிக்கும் இயலுமை அற்ற நிலையில் அவர்கள் காணப்படுவதற்கு ஏதுவாகியது. மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு அறிமுகப்படுத்திய மாற்றங்கள் இவ்வாறான தடைகளை அகற்றுவதுடன் பயிற்சி வழங்குனர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் ஆகியோர் மாற்றுத்திறன் கொண்ட நபர்களுக்கு திறன் அங்கீகாரத்தின் ஊடாக நெகிழ்வுத்தன்மை கொண்ட திறன் பயிற்சி விநியோகம், ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட தகுதித் தர நிலையைக் காண்பிப்பதற்கான மதிப்பீடு அத்துடன் வழங்கப்பட்ட திறன் தொகுதி ஒன்றில் நிபுணத்துவம் பெறல் போன்ற ஆதரவுகளை வழங்குகின்றன.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முன்னெடுப்பான உள்வாங்கும் வளர்ச்சிக்கான திறன்கள் திட்டம் (The Skills for Inclusive Growth Project (S4IG)) திறன்கள் அமைச்சு மற்றும் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு என்பவற்றின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் திட்டமாகும். உள்வாங்கும் வளர்ச்சிக்கான திறன்கள் திட்டமானது சுற்றுலா பெறுமதிச் சங்கிலியில் பணி மேற்கொள்ள உள்ளவர்கள் அத்துறைக்கு அவசியமான திறன்களைப் பெறுவதை வேலை வழங்குனர்கள் உறுதி செய்து கொள்வதற்காக திறன் விருத்தியை மீள் நிலைப்படுத்தல் மற்றும் பயிற்சியளித்தல் அணுகுமுறைகளை வலுப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் மூலம் மேம்படுத்தப்பட்ட வேலை வெளியீடுகள் மற்றும் பயிலுனர்களின் வருமான மட்ட அதிகரிப்பு என்பன எட்டப்படலாம். பணியாளர்கள் சிறந்த திறன்களைக் கொண்டிருப்பது தொழில் முனைவினால் வழங்கப்படும் சேவையின் தரத்தை அதிகரிக்கின்றது. அவ்வாறான சேவைத் தரத்தின் அதிகரிப்பு தொழில் முனைவின் வருமான அதிகரிப்பில் பங்களிக்கும் முக்கிய விடயங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. உலகத் தரம் மிக்க சுற்றுலாத் துறையொன்று இலங்கை முழுவதுமான உள்வாங்கும் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க வல்லது, எனினும் அதற்கு உலகத் தரமம் மிக்க பணியாளர் அணியொன்று அவசியமாகின்றது. இலங்கையர்களுக்கு சுற்றுலா பெறுமதிச் சங்கிலியில் பல வாய்ப்புகள் காணப்படுகின்றன, அவை தகுதி வாய்ந்த திறன்களைக் கொண்டவர்களால் அணுகப்பட முடியுமானவைகளாகக் காணப்படுகின்றன.

மாற்றுத்திறன் கொண்ட நபர்கள் திறன் விருத்தியை அணுகுவதை உறுதி செய்வதற்கு மற்றும் அவர்களின் திறன்கள் அங்கீகாரம் பெறப்பட்டு அவை பணி வழங்குனர்களுக்கு காண்பிக்கப்படுவதற்கு அவசியமான கருவிகள் உருவாக்கப்பட்டு, அக்கருவிகள் இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்படுவதற்கு தயார் நிலையில் காணப்படுகின்றது. இக்கருவிகள் “நியாயமான மதிப்பீடு” என்பதை சாத்தியமான விடயமொன்றாக மாற்றியுள்ளதுடன் தொழிற்துறைகள் தீர்மானித்துள்ள பணித் தேவைகளை செயற்படுத்துவதற்கு தேவையான திறன்களில் தகுதித் தரநிலை மற்றும் நிபுணத்துவத்தை காண்பிப்பதில் கவனம் செலுத்தும் மதிப்பீட்டு முறைனை ஒன்றையும் உருவாக்கியுள்ளன. இக்கருவிகளின் அமுலாக்கம் மற்றும் பயன்பாடு என்பன எம்மில் மாற்றுத்திறன் கொண்டவர்களாகக் காணப்படும் நபர்களின் மதிப்பீடு செய்யப்படல் மற்றும் எமது திறன்கள் அங்கீகரிக்கப்படல் என்பவற்றுக்கு ஆதரவளிக்கும். இந்த அங்கீகாரம், பணியாளர் அணியில் உள்ள திறன் குறைபாடுகள் அகற்றுவதற்கு தொழிற் துறைக்கு உதவுவதுடன் முன்னர் புறக்கணிக்கப்பட்டவர்களின் வேலை மற்றும் வருமான வாய்ப்புகளை மேம்படுத்தும்.

அரசாங்கத்தின் கொள்கை அமுலாக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தமது திறன்கள் மதிப்பிடப்படுவதற்கான அணுகலைப் பெறுவதன் மூலம் பணிச் சந்தையில் நுழைந்து தமது திறன்களைப் பயன்படுத்தும் நோக்கில் இக்கருவிகளை வெளியிடுவதில் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் கடப்பாடு கொண்டிருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். சிறந்த நடவடிக்கைகள் பயிற்சி வழங்குநர்களாலும் தொழிற்துறை மதிப்பீட்டாளர்களாலும் தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுவது எமது சமூகத்தின் இப்பகுதியினர் தமது திறன்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலம் பெறப்படும் நன்மைகளை அனுபவிக்க முடியும். இந்த உதவியின் மூலம் உருவாக்கப்பட்ட கருவிகள் பங்குதாரர்கள் இடையே சிறந்த திறன் விருத்திச்சேவைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் மற்றும் விவாதங்களை ஊக்குவிக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

**டேவிட் அப்லெட்**
அணித் தலைவர்
உள்வாங்கும் வளர்ச்சிக்கான திறன்கள் (S4IG) திட்டம்

# முன்னுரை



தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சி (TVET) என்பது இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் உயர்ந்த அளவுகளில் காணப்படும் வேலையில்லா வீதம் மற்றும் அவர்களின் குறைந்த மட்ட கல்வி நிலை என்பவற்றுக்கு முக்கியமான தீர்வொன்றை வழங்குகின்றது. மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அண்மையில் வழங்கப்பட்ட கொள்கைகள், பிரதான தொழிற்பயிற்சி நிலையங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு பயிற்சி வழங்குவதை முழுமையாக ஊக்குவிப்பதுடன் தேசிய தொழிற்றகைமை சட்டக வடிவமைப்பில் ஏற்கனவே காணப்படும் பயிற்சி நெறிகளை மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு ஏற்ற வகையில் நிலைமாற்றுதல் மற்றும் அவர்களுக்கு தனித்துவம் மிக்க பாடநெறிகளை உள்ளடக்குதல் என்பவற்றுக்கு ஆதரவளிக்கின்றது.

மாற்றுத்திறன் கொண்ட நபர்கள் தேசிய தொழிற்றகைமைப் பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்பதை மேம்படுத்துவதற்காக மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு மாற்றுத்திறனாளிகளின் NVQ மதிப்பீட்டில் நியாயமான சீராக்கல்கள் வழங்கும் ஏற்பாடுகளுக்கான வழிகாட்டல்கள் கொண்ட புதிய சுற்றறிக்கை ஒன்றுக்கும் அனுமதி வழங்கியுள்ளது. நெகிழ்வுத்தன்மை கொண்ட மற்றும் நியாயமான மதிப்பீட்டுக்கான அணுகுமுறைகள் தகுதித் தர மட்டத்தில் எந்த வித விட்டுக்கொடுப்பையும் வழங்காமல் மாற்றுத்திறனாளிகளின் பல்வகைத் தன்மை கொண்ட தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் உள்வாங்கப்பட்டுள்ளன.

பயன்பெறுநர் நேயம் மிக்க இக் கருவித் தொகுதி NVQ மதிப்பீட்டாளர்கள் மாற்றுத்திறனாளிகளை மதிப்பீடு செய்யும் வேளை நியாயமான சீராக்கல்கள் என்ற கருதுகோளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்துக்காக மாற்றுத்திறனின் வகை மற்றும் பாடநெறி என்பவற்றுக்கு ஏற்ப காட்சி வடிவில் அமைந்த அத்துடன் நடைமுறை ரீதியான உதாரணங்கள் இக்கருவித்தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பயிற்சி நிலைய ஆளணி மற்றும் மதிப்பீட்டாளர்கள் இப்புதிய கருவித்தொகுதியைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன் மாற்றுத்திறனாளிகளைப் பயிற்சியில் ஈடுபடுவதற்கும் தன்னம்பிக்கையுடன் மதிப்பீட்டுக்கு தோன்றுவதற்கும் நாம் ஊக்குவிக்கின்றோம். இங்கு ஏற்பட்டுள்ள அண்மைக்கால முன்னேற்றங்களின் பிரகாரம், முழுமையான தர நிலையை பூர்த்தி செய்யாத பயிலுனர்களுக்கு, அவர்களால் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்த அலகுகள் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான “அடைவுப் பதிவு” (The Skills for Inclusive Growth Project (S4IG)) ஒன்றை வழங்குவதற்கு மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

TVET முறைமையில் மாற்றுத்திறன் உள்வாங்கலை மேம்படுத்துவதற்கு, உள்வாங்கும் வளர்ச்சிக்கான திறன்கள் (S4IG) திட்டம் எமக்கு வழங்கும் ஆதரவுக்கும், குறிப்பாக பெறுமதி மிக்க இக்கருவித் தொகுதி உருவாக்கியமைக்காகவும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஜானக ஜயலத்**
பணிப்பாளர் நாயகம் (பதில்)
மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு
(TVEC)
354-2, “நிபுணதா பியச” எல்விடிகல மாவத்தை
கொழும்பு 05, இலங்கை

இணையம்: www.tvec.gov.lk

# முன்னுரை



அரசாங்கத்தின் “வளம் மற்றும் மலர்ச்சிக்கான பாதைகள்” (Vistas of Prosperity and Splendour) என்ற தேசிக்கொள்கைச் சட்டக வடிவமைப்புக்கு ஏற்ப கல்விச் சீர்திருத்தம் மற்றும் திறன் விருத்தி என்பவற்றின் உருமாற்றப் படிநிலை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சீர்திருத்த மற்றும் அபிவிருத்தி தொடர்ச் செயன்முறை அதி மேதகு ஜனாதிபதி அவர்களினால் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள “திறன் விருத்திக்கான தசாப்தம்” என்ற 2021 தொடக்கம் 2030 வரையான முன்னெடுப்பின் ஆதரவும் கிடைக்கப்பெற்றுள்ளது. திறன் விருத்திக்கான தசாப்தம் என்பது கடந்த 2014 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை ஜனாதிபதியினால் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுஸ்டிக்கப்படுகின்ற உலகளாவிய இளைஞர் திறன்கள் தினம் என்ற வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். திறன் விருத்திக்கான தசாப்தத்தின் செயற்றிட்டம் அடுத்த தலைமுறையின் திறன்களை பேண்தகு மற்றும் உள்வாங்கும் அபிவிருத்தியுடன் பொருந்த வைப்பதில் கவனம் செலுத்துகின்றது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் உள்வாங்கும் வளர்ச்சிக்கான திறன்கள் (S4IG) நிகழ்ச்சித்திட்டத்தின் ஆதரவுடன் திறன்கள் விருத்தி, தொழிற்பயிற்சி, ஆய்வு மற்றும் புத்தாக்க அமைச்சு மற்றும் தொழிற்கல்வியின் உச்ச அமைப்பான மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு என்பன பிரதான தொழிற்பயிற்சி நிலையங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு பயிற்சி வழங்குவதை முழுமையாக ஊக்குவிப்பதுடன் NVQ சட்டக வடிவமைப்பில் ஏற்கனவே காணப்படும் பயிற்சி நெறிகளை மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு ஏற்ற வகையில் நிலைமாற்றுதல் மற்றும் அவர்களுக்கு தனித்துவம் மிக்க பாடநெறிகளை உள்ளடக்குதல் என்பவற்றுக்கும் ஆதரவளிக்கின்றன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயன்பெறுநர் நேயம் மிக்க இக் கருவித் தொகுதி NVQ மதிப்பீட்டாளர்கள் மாற்றுத்திறன் கொண்ட நபர்களை மதிப்பீடு செய்யும் வேளை நியாயமான சீராக்கல்கள் என்ற கருதுகோளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்துக்காக உடலியல், செவிமடுத்தல், பார்வை, மற்றும் புத்திக்கூர்மை இயலாமை வகைகள் மற்றும் பாடநெறி என்பவற்றுக்கு ஏற்ப காட்சி வடிவில் அமைந்த அத்துடன் நடைமுறை ரீதியான உதாரணங்கள் இக்கருவித்தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்முன்னெடுப்பானது மாற்றுத்திறனாளிகள் உற்பத்தித் திறன் கொண்ட பணிகளில் ஈடுபடுவதன் ஊடாக நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்க ஆதரவளிக்கும்.

இக் கருவித்தொகுதியை உருவாக்குவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயற்படும் உள்வாங்கும் வளர்ச்சிக்கான திறன்கள் திட்டம் (S4IG) மேற்கொண்ட முயற்சிகளையும் மாற்றுத்திறனாளிகளுக்காக TVEC முறைமையில் நியாயமான சீராக்கல்களை அமுல்படுத்தும் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கும் அமைச்சு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

திரு. N.H.M. சித்ரானந்த
செயலளார்
திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்க அமைச்சு

# உள்ளடக்கம்

பகுதி 1. அறிமுகம்

1.1. TVET துறையில் மாற்றுத்திறனாளிகளை உள்வாங்குதல்

1.2. கையேட்டின் நோக்கம்

1.3. பிரதானமான வரைவிலக்கணங்கள்

1.4. வலது குறைவின் வகைகள்

1.5. பிரதானமான பரிந்துரைகள்

பகுதி 2. பொருத்தமான மாற்று ஒழுங்குகள் – அறிவுத்திறன் மதிப்பீடு

பகுதி 3. பொருத்தமான மாற்று ஒழுங்குகள் – செயல்முறை மதிப்பீடு

**3.01** அறை சுத்திகரித்தல் பாடநெறி – பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான உதாரணங்கள்

- தேர்ச்சி அலகுகளின் பட்டியல்
- நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி மட்டங்களை எட்டும் வகையிலான பொருத்தமான மாற்று ஒழுங்குகளின் பயனாளிகள் யார்?
- கேட்டல் திறனற்ற மற்றும் கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்
- இடுப்பிற்கு மேல், கீழ்ச் செயற்பாட்டில் வரையறையுடைய பயிற்சி பெறுநர்
- அறிவுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி பயிற்சி பெறுநர்

**3.02** சிப்பந்தி/பணியாளர்களுக்கான பாடநெறி – பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான உதாரணங்கள்

- தேர்ச்சி அலகுகளின் பட்டியல்
- நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி மட்டங்களை எட்டும் வகையிலான பொருத்தமான மாற்று ஒழுங்குகளின் பயனாளிகள் யார்?
- கேட்டல் திறனற்ற மற்றும் கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்
- இடுப்பிற்கு மேல், கீழ்ச் செயற்பாட்டில் வரையறையுடைய பயிற்சி பெறுநர்
- அறிவுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி பயிற்சி பெறுநர்

# உள்ளடக்கம்

**3.03** வரவேற்பாளர்களுக்கான பாடநெறி – பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான உதாரணங்கள்

- தேர்ச்சி அலகுகளின் பட்டியல்
- நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி மட்டங்களை எட்டும் வகையிலான பொருத்தமான மாற்று ஒழுங்குகளின் பயனாளிகள் யார்?
- கேட்டல் திறனற்ற மற்றும் கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்
- பார்வைத்திறனற்ற அல்லது பார்வைக் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்
- இடுப்பிற்குக் கீழ், மேல்ச் செயற்பாட்டில் வரையறையுடைய பயிற்சி பெறுநர்

**3.04** அழகுக்கலை நிபுணர் பாடநெறி – பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான உதாரணங்கள

- தேர்ச்சி அலகுகளின் பட்டியல்
- நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி மட்டங்களை எட்டும் வகையிலான பொருத்தமான மாற்று ஒழுங்குகளின் பயனாளிகள் யார்?
- கேட்டல் திறனற்ற மற்றும் கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சிபெறுனர்
- இடுப்பிற்குக் கீழ்ச் வரையறையுடைய பயிற்சிபெறுனர்

**3.05** சமையற்கலை பாடநெறி – பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான உதாரணங்கள்

- தேர்ச்சி அலகுகளின் பட்டியல்
- நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி மட்டங்களை எட்டும் வகையிலான பொருத்தமான மாற்று ஒழுங்குகளின் பயனாளர்கள் யார்?
- கேட்டல் திறனற்ற மற்றும் கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்
- இடுப்பிற்குக் கீழ், மேல் செயற்பாட்டில் வரையறையுடைய பயிற்சி பெறுநர்
- அறிவுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி பயிற்சி பெறுநர்

பகுதி

# 01

# அறிமுகம்

## 1.1. TVET துறையில் மாற்றுத்திறனாளிகளை உள்வாங்குதல்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் செயற்படும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது (TVEC) - **இலங்கையின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளுக்கான (TVET) தேசிய ஒழுங்குபடுத்தல் அமைப்பாகத் திகழ்கிறது.** இதன் பிரதான கடமைகளாக கொள்கை வரைபு, நிகழ்ச்சித் திட்டமிடல், தர உத்தரவாதம், ஒருங்கிணைப்பு மற்றும் இலங்கையில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியினை விருத்தி செய்தல் போன்றவை காணப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான தேசியக் கொள்கையின் - அத்தியாயம் 8 மற்றும் 2010 ஆம் ஆண்டின் இலங்கையில் அதிகம் பாதிப்புக்குள்ளாகக் கூடிய மக்களுக்கான TVET பரிகாரங்கள் தொடர்பான தேசியக் கொள்கை என்பவற்றுக்கமைய, **மாற்றுத்திறனாளிகள் TVET முறைமையில் விசேட கவனம் தேவைப்படும், பாதிப்புக்குள்ளாகக் கூடிய மற்றும் பின்தங்கிய குழுக்களைச் சேர்ந்தவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன்,** மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே திறன் அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளில் உள்வாங்கப்படுவதால் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதில் அவர்கள் பெருமளவு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

## 1.2. கையேட்டின் நோக்கம்

இன்றளவும் NVQ பயிற்சிப் பாடநெறிகளில் மாற்றுத்திறனாளிகள் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளதுடன், **நெகிழ்வானதும், அனைத்து தரப்பினரையும் உள்வாங்கக்கூடியதுமான பயிற்சி மற்றும் மதிப்பீட்டு அணுகுமுறையிலான குறைபாடுகள் காரணமாக,** அவர்களது செயற்றிறன், அறிவு மற்றும் திறமைகளை மதிப்பீடு செய்ய முடியாத நிலைமையானது, TVET முறைமையில் மாற்றுத்தினளரிகளை உள்வாங்குவதற்கான முயற்சிகளுக்குத் தடையாக உள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் பல்வேறுபட்ட தன்மை மற்றும் சூழ்நிலை காரணமாக, அவர்களுக்கு அதேபோன்று பலதிறப்பட்ட திறமைகளும் திறன்களும் காணப்படுகின்றன. சில மதிப்பீட்டின் போது மாற்றுத்திறனாளியொருவருக்குப் பொருத்தமான மாற்று ஒழுங்குகளை உள்ளடக்க வேண்டியிருப்பினும் ஏனைய சிலருக்கு அவ்வாறான ஏற்பாடுகள் தேவைப்படுவதில்லை. அந்தவகையில், எவ்வகையான **பொருத்தமான மாற்று ஒழுங்குகள் அவர்களுடைய** இறுதி மதிப்பீட்டின்போது அவர்களுடைய திறமையை வெளிப்படுத்த தேவைப்படும் என்பதனை இறுதி மதிப்பீட்டின் முன்னரே **கலந்துரையாடுவது** முக்கியமாகும். ஒரு பயனுள்ள பொருத்தமான மாற்று ஒழுங்குகளை திட்டமிடுவதற்கு **வினைத்திறன்மிக்க கூட்டுச்சிந்தனை** தேவைப்படுகின்றது.

இந்தக் கையேடானது, NVQ பயிற்சிப் பாடநெறிகளில் மாற்றுத்திறனாளிகளை இணைத்துக் கொள்வதற்கான இறுதி மதிப்பீட்டின் போது **NVQ மதிப்பீட்டாளர்கள் அவர்களுக்கு வழங்கவேண்டிய பொருத்தமான மாற்று ஒழுங்குகள் தொடர்பான நடைமுறை உதாரணங்களை வழங்குகின்றது.**

## 1.3. முக்கிய வரைவிலக்கணம்

### அத்தியாவசியமான தொழிற் செயற்பாடுகள்.

பெரும்பாலான தொழிற் செயற்பாடுகள் அந்த நிலையிலுள்ள எவரும் செய்யக்கூடிய வகையில் இருக்க வேண்டும். அந்த தொழில் இருப்பதற்கான காரணம் அது தான். அவசியமான தொழிற் செயற்பாடுகளை செய்யக்கூடிய அல்லது பொருத்தமான மாற்று தரநிலைகளை உபயோகித்து அல்லது உபயோகிக்காமல் தகுதி தரநிலைகளை சந்திக்கக்கூடியதாக இருப்பின் குறித்த மாற்றுத்திறனாளி பயிற்சி பெறுநர்கள் தொழிலுக்கு தகுதி பெறுவார்கள். வேலையின் சாரத்தைப் பாதிக்காத செயல்பாடுகளைப் பணியிடத்தில் உள்ள மற்ற ஊழியர்களுக்கு மீண்டும் ஒதுக்கலாம்.

### நெகிழ்வுத்தன்மை

இது வெவ்வேறுபட்ட சூழ்நிலைகள் மற்றும் பயிற்சி பெறுநரின் தேவைகளுக்கும் ஏற்ப தகுதி தரநிலைகளில் சமரசம் செய்யாமல் செயல்முறைகள், நடைமுறைகள் மற்றும் நிர்வாகத்தின் பொருத்தமான மாற்று ஒழுங்குகளைக் குறிக்கின்றது.

### வலதுகுறைந்த நபர்கள்

பிறவியிலிருந்தோ, இல்லாமலோ தனது உடல் அல்லது மன திறன்களில் ஏதேனும் குறைபாட்டின் விளைவாக, தனது வாழ்க்கையின் தேவைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தன்னால் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நபர் மாற்றுத்திறனாளி எனப்படுவார்.

குறைபாடுகள் மற்றும் அணுகுமுறை மற்றும் சுற்றுச்சூழல் தடைகள் உள்ள நபர்களுக்கு இடையிலான தொடர்பு காரணமாக இயலாமை விளைகிறது. இதனால் இவர்களால் சமூகத்தில் உள்ளவர்களுக்கு சமமாக, தமது முழுமையான மற்றும் பயனுள்ள பங்கேற்பைத் தடுக்கிறது.

### பொருத்தமான மாற்று ஒழுங்குகள்.

ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தேவைப்படும் இடங்களில், குறைபாடுகள் உள்ளவர்கள் மற்றவர்களுடன் சமமான அடிப்படையில், அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை அனுபவித்து மகிழ்வதை அல்லது தொழிற்படுவதை உறுதிசெய்வதற்கு, ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் தேவைப்படும் இடத்தில், நியாயமற்ற அல்லது தேவையற்ற சுமையை சுமத்தாத அவசியமான மற்றும் பொருத்தமான மாற்றம்.

மாற்றுத்திறனாளிகள் மற்றவர்களுடன் சமமான அடிப்படையில் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் தங்களுக்குத் தெரிந்த மற்றும் செய்யக்கூடியவற்றை நிரூபிக்கவும் தேவையான தொழில் மற்றும் தொழிலில் தொடர்புடைய தொழில் / தொழிலில் திறம்பட செயல்பட தேவையான திறமை மற்றும் திறன்களுக்கு ஏற்ப இது அனுமதிக்கிறது.

மதிப்பீட்டின் ஒருமைப்பாட்டை பாதிக்காமல், குறைபாடுகள் இல்லாத நபர்களுடன் ஒப்பிடுகையில் அவர்களுக்கு நியாயமற்ற மதிப்பீட்டு நன்மையை வழங்காமல், குறைபாடுகள் உள்ளவர்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

NVQ மதிப்பீட்டாளரின் கையேடு, TVEC.
1996 இன் எண் 28, மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்
மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஐ.நா.
பெப்ரவரி 2016 இல் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது
ஐடெம்.

## 1.4. வலது குறைவின் வகைகள்.

மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காண்பதற்கு 2012 மக்கள் தொகை கணக்கெடுப்பு வாஷிங்டன் குழுமத்தின் குறுகிய வினாக்கொத்தைப் பயன்படுத்தியது. இவர்கள் ஆறு முக்கிய செயல்பாட்டுக் களங்களில் சிரமங்கள் இருப்பதால் பங்கேற்றல் கட்டுப்பாடுகளுக்கு சாதாரண மக்களை விட அதிக ஆபத்து உள்ளவர்கள்.

- பார்த்தல் - கண்ணாடி அணிந்திருந்தாலும் கூட
- கேட்டல - கேட்டல் உதவி உபகரணத்தை பயன்படுத்தினாலும் கூட
- குறுகிய தூரம் நடந்து செல்வது அல்லது ஒரு படிக்கட்டில் 12 படிகள் மேலே/கீழே ஏறுதல்.
- நினைவில் வைத்தல் அல்லது கருத்தில் கொள்ளுதல்.
- அன்றாட சுய பாதுகாப்பு, கழுவுதல், ஆடை அணிவது போன்றன.
- தொடர்பாடல், எடுத்துக்காட்டாக புரிந்துகொள்ளுதல், புரிந்துகொள்ளப்படுத்தல்

### தற்போதைய கையேடு முதன்மையாக பின்வரும் குறைபாடுகளை உடைய நபர்களுக்கான மாற்று ஒழுங்குகளுக்கான உதாரணங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(கண்ணாடி அணிந்திருந்தாலும்) பார்ப்பதில் மற்றும் அன்றாட சுய பராமரிப்பில் ஈடுபவதற்கும் சிரமப்படும் நபர்கள்.

| | |
|---|---|
| பார்வைத் திறனற்ற நபர்கள் | அவர்கள் பார்வை அற்றவர்களாக இருக்கின்றனர் (ஒரு கண் அல்லது இரு கண்களும்), அதாவது அவர்கள் ஒளி மற்றும் வடிவங்களை முழுமையாக காண முடியாதவர்களாக இருக்கின்றனர். முழுமையான பார்வைத் திறனற்ற கொண்ட நபர்கள், ஒருவரின் உதவி மற்றும் / அல்லது ஒரு வெள்ளை பிரம்பு போன்ற நடமாடும் உதவிச் சாதனங்களைப் பெறலாம். |
| பார்வைக்குறைபாடுடைய நபர்கள் | அவர்கள் கண்ணாடி அல்லது தொடர்புறு வில்லைகள்(Lens) அணிந்திருந்தாலும் கூட அவர்களுக்கு ஓரளவு பார்வை இழப்பு உள்ளது - .பெரிதாக்கும் சாதனங்கள் அல்லது மாற்று முறைகள் போன்ற உதவித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்கள் பணிகளைச் செய்யலாம். |

## கேட்டல் மற்றும் தொடர்பாடலில் குறைபாடுள்ள நபர்கள்

| | |
|---|---|
| கேட்டல் திறனற்ற நபர்கள் | அவர்களுக்கு முழுமையாக கேட்டல் திறன் இல்லை, அதாவது அவர்களால் ஒருபோதும் கேட்கவே முடியாது. அவர்கள் தொடர்பாடலுக்கு பெரும்பாலும் முறையான அல்லது முறைசாரா சைகை மொழியைப் பயன்படுத்துகிறார்கள். |
| கேட்டல் திறனில் குறைபாடுள்ள நபர்கள் | அவர்கள் லேசான-மிதமான செவிப்புலன் இழப்பைக் கொண்டிருக்கலாம், அதாவது அவர்கள் ஓரளவு கேட்கலாம், கேட்கும் கருவிகளின் ஆதரவோடு அல்லது இல்லாமல், மற்றும் சில பேசும் மொழி சரளத்திற்கான அணுகல். அவர்கள் சைகை மொழி, உதடு வாசிப்பு மற்றும் பேசும் மொழி அல்லது இரண்டின் மூலமும் தொடர்பு கொள்ளலாம். |

## நடத்தல்/ஏறுதல் மற்றும அன்றாட சுய பராமரிப்பில் ஈடுபவதற்கு சிரமப்படும் நபர்கள்.

| | |
|---|---|
| இடுப்பிற்கு மேல் செயற்பாட்டில் வரையறை உடைய நபர் | அவர்களின் இடுப்பிற்கு மேல் இயக்கங்களுடன் (கைகள், கைகள், விரல்கள், முதுகு போன்றவை) தொடர்புடைய பணிகளைச் செய்வதில் அவர்களுக்கு சிரமம் உள்ளது. அவர்கள் உதவிச் சாதனங்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தலாம். அல்லது பிடிப்பது, பொருட்களை அடைதல் போன்ற பணிகளைச் செய்வதற்கான மாற்று முறைகளையும் பயன்படுத்தலாம். |
| இடுப்பிற்குக் கீழ்ச் வரையறை உடைய நபர் | அவர்களின் இடுப்பிற்குக் கீழ் இயக்கங்களுடன் (முதுகு, கால்கள், கால்கள் போன்றவை) தொடர்புடைய பணிகளைச் செய்வதில் அவர்களுக்கு சிரமம் உள்ளது.. அவர்கள் நடைபயிற்சி குச்சி, ஊன்றுகோல், செயற்கை மூட்டு, சக்கர நாற்காலி, ஏற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட்ட கருவி போன்ற உதவிச் சாதனங்களைப் பயன்படுத்தி பணிகளைச் செய்யலாம் - அல்லது மாற்று முறைகள். |

## நினைவில் வைத்திருத்தல் / கவனம் செலுத்துதல் மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றில் சிரமத்தை உடைய நபர்கள்.

| | |
|---|---|
| அறிவுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி. | அறிவு மற்றும் திறன்களைப் பெறுவதற்கும் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் அவர்களுக்கு சிரமங்கள் உள்ளன. அவர்கள் பொதுவாக அறிவைப் பொதுமைப்படுத்துவதில் சிக்கல், நினைவாற்றல் மற்றும் மொழி வளர்ச்சி ஆகியவற்றில் சிரமம் மற்றும் பேச்சுக் கோளாறு உடையவர்கள்.<br>மாற்று முறைகளைப் பயன்படுத்தி அவர்கள் பணியைச் செய்யலாம். |

## 1.5. முக்கிய பரிந்துரைகள்



### பரிந்துரை #1

பொதுவான மதிப்பீடுகளைத் தாண்டி பொருத்தமான மாற்று ஒழுங்குகள் இடம்பெற வேண்டும். மதிப்பீட்டின் போது குறைபாடுள்ள ஒருவருக்கு பொருத்தமான ஒன்று, அதே வகை குறைபாட்டைக் கொண்ட மற்றொரு நபருக்கு பொருத்தமாக இருக்கும் என்று கருத முடியாது.

### பரிந்துரை #2

அனைத்து முன்மொழியப்பட்ட மாற்றங்களும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நியாயமான, அனுமதிக்கப்பட்ட நடைமுறைக்குரிய விடயமாக இருக்காது. விசேட தேவையுடைய பயிற்சிபெறுநர்களின் அனைத்து மதிப்பீடுகளுக்கும் ஒரே வகையான மாற்று ஒழுங்குகள் தேவைப்படமாட்டாது.

### பரிந்துரை #3

NVQ மதிப்பீட்டாளர்கள் தொழிற்பயிற்சி மையத்தின் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மற்றும் வலது மாற்றுத்திறனாளியாக பயிற்சி பெறுநருடன் மதிப்பீட்டின் போது செய்ய வேண்டிய பொருத்தமான மாற்று ஒழுங்குகள் குறித்து விவாதிக்க வேண்டும். பொருத்தமான மாற்று ஒழுங்குகளைப் பற்றி தீர்மானிக்கும்போது தேர்ச்சி அலகுகள் மற்றும் அவற்றின் அடிப்படை அறிவு மற்றும் திறன்கள் என்பவை சேர்த்து கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

### பரிந்துரை #4

NVQ மதிப்பீட்டாளர்கள் பயிற்சி பெறுநர்களை மதிப்பீடு செய்யும்போது நிகழ்த்தப்படும் ஒட்டுமொத்த பணிகளின் தரம் மற்றும் துல்லியம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். பணிகள் நிறைவேற்றப்படும் வேகம் குறித்து அல்ல. (குறிப்பாக மதிப்பீட்டின் போது வேகம், செயற்றிறன் அளவுகோலாக இல்லாவிட்டாலும்). செயற்படுத்தலில் வேகம் தொழில் அனுபவத்துடன் வரும்.

பகுதி

# 02

# பொருத்தமான மாற்று ஒழுங்குகள் - அறிவு மதிப்பீடு

## 2.1. எழுத்துத் தேர்வுக்கு பதிலாக வாய்மொழி மதிப்பீட்டை நடத்துதல்



- அவர்களது குழந்தைப் பருவத்தில் கல்விக்கான அணுகும் வசதி தடைப்பட்டிருத்தல் / அல்லது கல்வி தொழில்நுட்பத்தினை அணுகும் வசதி இல்லாமை காரணமாக வாசிக்கவோ எழுதவோ முடியாத பயிற்சி பெறுநர்கள் எழுத்துமூலமான தேர்வை வாய்மொழி மதிப்பீட்டாக மாற்றுவது பொருத்தமான மாற்று ஒழுங்கு ஆகும். குறிப்பாக எழுதும் திறன், ஒரு அத்தியாவசிய வேலைச் செயற்பாடு அல்லாமலும் ஒரு தகுதி தரநிலையாகவும் இல்லாத போது
  உதாரணம்: அறை உதவியாளர், சமையல்காரர், முதலியன.

- இடுப்பிற்கு மேல் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்களுக்கு கை இயக்கம் பிரச்சினைகள் காரணமாக எழுத முடியாமல் போகலாம்.





### இது பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான மாற்று ஒழுங்குகளுடன் இணைக்கப்பட வேண்டும்:


| | | | | |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| உதவி அல்லது சிறப்பு அமைவு காரணமாக குறைந்தபட்சம் 25% க்கும் அதிகமான நேரம் | சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் | மதிப்பீட்டாளரின் வினாக்களை எளிதான மற்றும் எளிமையான மொழியில் மொழிபெயர்க்க பயிற்சியாளரின் இருப்பு | மேற்பார்வை செய்யப்பட்ட ஓய்வு தேர்வு அறையிலிருந்து வெளியேறும் (ஒவ்வொரு 40 நிமிடங்களுக்கும் 10 நிமிட இடைவெளி | இடையூறு, கவனக் கலைப்பான் ஆகியவற்றைத் தவிர்க்க அல்லது அணுகும் வசதியான உறுதிப்படுத்த தனியான இடம் |
| வெவ்வேறு வகையான குறைபாடுகளை / மாற்றுத்திறன்களைக் கொண்ட பயிற்சிப் பெறுநர். | கேட்டல் குறைபாடுடைய பயிற்சிப் பெறுநர். | அறிவுத்திறண் குறைபாடுடைய மாற்றுத்திறன்களைக் கொண்ட பயிற்சிப் பெறுநர். | | வெவ்வேறு வகையான குறைபாடுகளை / மாற்றுத்திறன்களைக் கொண்ட பயிற்சிப் பெறுநர். |

## 2.2. பயிற்சியின் போது அல்லது பணியிடத்தில் பயன்படுத்தப்படும் சொற்களைப் பயன்படுத்தி கேள்விகளை எளிதான மற்றும் எளிமையான மொழியில் வகுத்தல்

அறிவு சார்ந்த குறைபாடுகள் உள்ள பயிற்சி பெறுநர்களுக்கு நிர்ணயித்த வினாக்களைப் புரிந்துகொள்வதற்கும் தகவல்களை மனப்பாடம் செய்வதற்கும் சிரமம் உள்ளது.

| நிர்ணயித்த வினாக்கள் | ஏற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட்ட வினாக்கள் |
|---|---|
| **வினாக்களை எளிதாக்குதல்** | |
| தூய்மையாக்கும் (ட்ரொலி) தள்ளுவண்டியை எவ்வாறு ஆயத்தப்பத்துவீர்கள்? | கேட்கும் கேள்விகள்: நீங்கள் தரையை சுத்தம் செய்வதற்கு வேண்டிய பொருட்கள் யாவை? தளபாடங்கள் சுத்தம் செய்ய? முதலியன<br><br>நீங்கள் சென்று ஒரு அறையை சுத்தம் செய்ய வேண்டும். உங்கள் வாளியில் நீங்கள் கொண்டு வரும் முக்கிய பொருட்கள் யங்கள் யாவை?<br><br>(பயிற்சியின் போது பயிற்சி பெறுநர் ஒரு வாளியைப் பயன்படுத்தினார், ஆனால் தள்ளுவண்டியைப் பயன்படுத்தவில்லை) |
| **வினாவை எளிதாக்க்கல் + பல தேர்வு பதில்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்** | |
| ரொட்டி தயாரிக்கும் செயல்முறையின் இறுதியில் பயன்படுத்தப்படும் இரண்டு மூலப்பொருட்கள்:<br><br>**a.** நீர், கொழுப்பு<br><br>**b.** ஈஸ்ட், நீர்<br><br>**c.** கோதுமை மாவு, நீர்<br>உப்பு, கொழுப்பு | நீங்கள் ரொட்டி செய்ய வேண்டும். இறுதிக் கட்டத்தில் நீங்கள் பயன்படுத்தும் 2 பொருட்கள் யாவை?<br><br>**a.** கோதுமை மாவு, நீர்<br><br>**b.** உப்பு, கொழுப்பு<br><br>மதிப்பீட்டாளர் 'நீங்கள் எப்படி ரொட்டி தயாரிக்கிறீர்கள்?' போன்ற கூடுதல் நடைமுறை வினாக்களை வினவ வேண்டியிருக்கலாம். நீங்கள் முதலில் கலக்கும் பொருட்கள் யாவை? பின்னர்? |


இது பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான மாற்று ஒழுங்குகளுடன் இணைக்கப்பட வேண்டும்:

|  |  |  |  |  |  |
|---|---|---|---|---|---|
| உதவி அல்லது சிறப்பு அமைவு காரணமாக குறைந்தபட்சம் 25% க்கும் அதிகமான நேரம் | எழுத்துத் தேர்வுக்கு பதிலாக வாய்மொழி மதிப்பீட்டை நடத்துதல். | எழுதுவதற்கு அல்லது பதிலளிப்பதற்கு பதிலாக வாய்மொழி மூலம் விளக்கமளித்தல் | மதிப்பீட்டாளரின் கேள்விகளை எளிதான மற்றும் எளிமையான மொழியில் மொழிபெயர்க்க பயிற்சியாளரின் இருப்பு. | மேற்பார்வை செய்யப்பட்ட ஓய்வு தேர்வு அறையிலிருந்து வெளியேறும் (ஒவ்வொரு 40 நிமிடங்களுக்கும் 10 நிமிட இடைவெளி). | தேவையான போது கேள்வியை திரும்பி வாசித்தல். |

## 2.3. எழுத்துத் தேர்வின் போது ஏற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்த அனுமதித்தல்.

இடுப்பிற்கு மேல் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்களுக்கு கை இயக்கம் பிரச்சினைகள் காரணமாக சாதாரண பேனா அல்லது பென்சிலுடன் பிடித்தல் / பற்றிக்கொள்ளுதல் மற்றும் எழுதுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறனர்.

குறைந்த விலையிலான பென்சில் அல்லது பேனா மூலம் எழுத உதவும் உபகரணங்கள்




இது பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான மாற்று ஒழுங்குகளுடன் இணைக்கப்பட வேண்டும்:



உதவி அல்லது சிறப்பு அமைவு காரணமாக குறைந்தபட்சம் 25% க்கும் அதிகமான நேரம்

## 2.4. மதிப்பீடு நிகழும் இடத்திற்கு வசதியான அணுகும் வசதியை உறுதிசெய்தல்.



இடுப்பிற்குக் கீழ் வரையறைகளைக் கொண்ட பயிற்சி பெறுநனர்கள் நடமாடுவதற்கு உதவும் உபகரணங்களுடன் (கோல் ,செயற்கைக்கால், ஊன்றுக்கோல், சக்கர நாற்காலி போன்றவை) நடமாட வசதியாயிருத்தல்.






மதிப்பீடு கீழ் தளத்தில் நடைபெறுகிறது, மேலும் அணுகக்கூடிய கழிப்பறை வசதி பரீட்சை மண்டபத்திற்கு அறைக்கு அருகிலுள்ளது.

### இது பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான மாற்று ஒழுங்குகளுடன் இணைக்கப்பட வேண்டும்:

| | | | | |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுநர் அணுகக்கூடிய வகையில் தேர்வு மேசை இருத்தல். | கால்கள் ஓய்வெடுக்க மேசைகள் மற்றும் நாற்காலி மற்றும் மேசைகளுக்கு இடையில் போதுமான இடம் | தனி மற்றும் அணுகக்கூடிய இடம் | தேர்வு அறையை அணுகவும் வெளியேறவும் பயிற்சி பெறுநருக்கு உதவி வழங்கப்படுதல். | மேற்பார்வை செய்யப்பட்ட ஓய்வு தேர்வு அறையிலிருந்து வெளியேறும் (ஒவ்வொரு 40 நிமிடங்களுக்கும் 10 நிமிட இடைவெளி |

## 2.5. எழுத்துத் தேர்வின் போது ஒரு வாசிப்பவர் / எழுதுபவரை வழங்குதல்


**பார்வை குறைபாடுகள் உள்ளவர்களுக்கு (பார்வையற்றோர், குறைந்த பார்வை) தேர்வுத் தாளை அணுக முடியாததால் அதைப் படிக்க முடியாது.**

- **வாசகர்** வினாக்களைச் சத்தமாக வாசிப்பதை நோக்கமாகக் கொண்டார் மற்றும் பயிற்சி பெறுநர் வினாக்களுக்கு வாய்மொழியாக பதிலளிப்பார்.

- **எழுதுபவர்** வினாக்களைப் படித்து, பயிற்சி பெறுநரால் வடிவமைக்கப்பட்ட பதில்களை சரியாக எழுதுவதை நோக்கமாகக் கொண்டுள்ளார். பயிற்சி பெறுநர் நிறுத்தற்குறி மற்றும் பக்க தளவமைப்பு குறித்து எழுத்தாளருக்கு அறிவுறுத்த வேண்டும்.



### இது பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான மாற்று ஒழுங்குகளுடன் இணைக்கப்பட வேண்டும்:

| | |
|---|---|
|  |  |
| உதவி அல்லது சிறப்பு அமைவு காரணமாக குறைந்தபட்சம் 25% க்கும் அதிகமான நேரம் | இடையூறு, கவனக் கலைப்பானைத் தவிர்ப்பதற்கு அல்லது அணுகும் வசதியை உறுதிப்படுத்த தனியான இடம். |

## 2.6. வினாத்தாளை மாற்றுவடிவத்தில் வழங்குதல்

பார்வைக் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு (பார்வையற்றோர் அல்லது பார்வைக்குறைபாடு) வினாத்தாளை பார்ப்பதற்கு முடியாததால் அதைப் படிக்க முடியாது.






வினாத்தாள் பிரெயிலில் வழங்கப்பட்டுள்ளது, பயிற்சி பெறுநர் பிரெயிலில் **பிரெய்ல் ஸ்லேட்டைப்** பயன்படுத்தி எழுதலாம் (இடதுபுறத்தில் உள்ள படம்) அல்லது **பிரெய்ல் தட்டச்சு இயந்திரம்** (வலதுபுறம் உள்ள படம்).





வினாத்தாள் **எண்கணித ஒலிநாடா (Digital Audio) பிளேயரில்** வழங்கப்பட்டுள்ளதுடன் (இடதுபுறத்தில் உள்ள படம்) பயிற்சிபெறுநர் **ஒலிப்பதிவு நாடாவைப்** பயன்படுத்தி பதில்களை பதிவு செய்யலாம். (வலதுபுறம் உள்ள படம்)






வினாத்தாள் **வண்ணத் தாளில்** (இடதுபுறத்தில் உள்ள படம்) அல்லது **பெரிய எழுத்துருவில்** (18-அளவு எழுத்துருவில்) அச்சிடப்பட்டுள்ளது. மற்றும் / அல்லது A3 **அளவிற்கு** (வலதுபுறத்தில் உள்ள படம்) **பெரிதாக்கப்படுகிறது.**

### இது பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான மாற்று ஒழுங்குகளுடன் இணைக்கப்பட வேண்டும்:

|  |  |  |
|---|---|---|
| உதவி அல்லது சிறப்பு அமைவு காரணமாக குறைந்தபட்சம் 25% க்கும் அதிகமான நேரம் | பிரெய்ல் ஸ்லேட் அல்லது பிரெய்ல் தட்டச்சு இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக பதில்களை எழுத ஒரு எழுத்தாளர். | போதுமான விளக்குகள் - குறைக்கப்பட்ட அல்லது அதிகரித்த விளக்குகள் |

## 2.7. பேரீட்சைப் பதில்களை வழங்க உதவித் தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதியுங்கள்.

**பார்வை குறைபாடுகள் உள்ளவர்களுக்கு (பார்வையற்றோர் அல்லது குறைந்த பார்வை) வினாத்தாளைப் பார்ப்பதற்குத் தாளை அணுக முடியாததால் அதைப் படிக்க முடியாது.** தேர்வின் இலத்திரனியல் பதிப்பைப் பயிற்சி பெறுநர்களுக்கு வழங்க முடியும், கீழுள்ள இரண்டு கணனி அணுகல் கருவிகளுக்கு நன்றி:

- ஒரு **திரை வாசித்தல் மென்பொருள்** கணினித் திரையில் காண்பிக்கப்படும் அனைத்து வாக்கியங்கள் மற்றும் சொற்கள் அடிப்படையிலான கூறுகளையும் சத்தமாக வாசிக்கும்.

- ஒரு **திரை உருப்பெருக்கி** கணினித் திரையில் காண்பிக்கப்படும் தகவல்களை பெரிதாக்குகிறது, அது தானாகவே உதவியாக இருக்கும் அல்லது திரை வாசித்தல் மென்பொருளுடன் இணைந்து பயன்படுத்தப்படுகிறது.



திரை வாசித்தல் மென்பொருளின் பயன்பாடு




திரை உருப்பெருக்கியின் பயன்பாடு

## இது பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான மாற்று ஒழுங்குகளுடன் இணைக்கப்பட வேண்டும்:



உதவி அல்லது சிறப்பு அமைவு காரணமாக குறைந்தபட்சம் 25% க்கும் அதிகமான நேரம்

பகுதி

# 03

# பொருத்தமான மாற்று ஒழுங்குகள் - நடைமுறை மதிப்பீடு



அறை வருகை
பாடநெறி
பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான
எடுத்துக்காட்டுகள்
பகுதி 3.01
ஸ்டீவர்ட்/வெயிட்டர்
பாடநெறி
பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான
பகுதி 3.02
வரவேற்பாளர்
பயிற்சி நெறி
பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான
எடுத்துக்காட்டுகள்
பகுதி 3.03
பொருத்தமான மாற்று ஒழுங்குகள்
நடைமுறை மதிப்பீடு
அழகுக்கலை
பாடநெறி
பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான
எடுத்துக்காட்டுகள்
பகுதி 3.04
சமையல் பயிற்சி நெறி
பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான
எடுத்துக்காட்டுகள்
பகுதி 3.05
பொருத்தமான மாற்று ஒழுங்குகள்
நடைமுறை மதிப்பீடு

# அறை உதவியாளர் பாடநெறி

## பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான எடுத்துக்காட்டுகள்



பகுதி 3.01

# பொருத்தமான மாற்று ஒழுங்குகள்

நடைமுறை மதிப்பீடு

## 3.1. அறை உதவியாளர் பாடநெறி - பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான எடுத்துக்காட்டுகள்.



அம்பாறையிலிருந்து வந்த அறை உதவியாளர் பயிற்சி பெற்றவர்கள்



திருகோணமலையில் இருந்து வந்த அறிவுசார் ஊனமுற்ற நபர்

### தேர்ச்சி அலகுகளின் பட்டியல்

| இல | தேர்ச்சி அலகுகளின் பட்டியல் |
|---|---|
| 01 | ஆங்கில தொடர்பு உள்ளிட்ட தொழில் திறன் |
| 02 | சுகாதாரம் மற்றும் நேர்த்தி |
| 03 | ஒரு ஹொட்டலின் அமைப்பு |
| 04 | விருந்தினர் வெளியேறும் அறையைச் சுத்தம் செய்தல் மற்றும் ஏற்பாடு செய்தல் |
| 05 | காலியாக உள்ள அறையை சுத்தம் செய்தல் மற்றும் ஏற்பாடு செய்தல் |
| 06 | விருந்தினர் தங்கியுள்ள அறையை சுத்தம் செய்தல் மற்றும் ஏற்பாடு செய்தல் |
| 07 | நடைபாதை மற்றும் சேவை பகுதியை சுத்தம் செய்தல் மற்றும் ஏற்பாடு செய்தல் |
| 08 | சிறிய மதுக்கூடத்தை கையாளுதல் |
| 09 | பொது பகுதிகளை சுத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் |

### தகுதித் தரங்களை பூர்த்தி செய்ய பொருத்தமான மாற்று ஒழுங்குகளிலிருந்து யார் பயனடையலாம்?

உலகெங்கிலும் உள்ள சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில், கீழேயுள்ள அட்டவணை வலது குறைந்தோர் / செயற்பாட்டு வரையறையுடையோர் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது, தொழில் வழங்குநர் அறை உதவியாளர்களுக்கு இடமளிக்க முடியும். ஒரு அறை உதவியாளர் எந்தவொரு அறையையும் சுத்தம் செய்வதற்கு முன்னும் பின்னும் ஒவ்வொரு அறையையும் பார்வைக்கு பரிசோதிக்க வேண்டும். பார்வையற்றவர் அல்லது குறைந்த பார்வை கொண்ட ஒரு நபர் தகுதித் தரங்களை பூர்த்தி செய்ய முடியாமல் போகலாம் - பொருத்தமான மாற்று ஒழுங்குகளை வழங்கினாலும் கூட. இருப்பினும், இது ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

அறை பராமரித்தல் பாடநெறி

- கேட்டல் குறைபாடுடைய அல்லது காது கேளாத பயிற்சி பெறுநர்
- இடுப்பிற்கு மேல் செயற்பாட்டில் அல்லது இடுப்பிற்கு கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்
- அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்

# கேட்டல் குறைபாடுடைய அல்லது காது கேளாத பயிற்சி பெறுனர்

**தகவல்தொடர்புத் தடைகளைத் தாண்டுதல்** - பயிற்சி பெறுநரின் திறன்கள் மற்றும் செயற்றிறனை முழுமையாக ஆராய்வதற்கு தகவல் தொடர்பு என்பது மிக அவசியம். மதிப்பீட்டின் போது சம வாய்ப்பை உறுதிப்படுத்த வெவ்வேறு தகவல்தொடர்பு வழிகளைப் பயன்படுத்தலாம்: சைகை மொழி, உதடு வாசிப்பு, எழுதப்பட்ட குறிப்புகள். ஒரு அறை உதவியாளரின் அத்தியாவசிய வேலை செயல்பாடுகளுக்கு விருந்தினர்களுடன் அதிக தொடர்பு தேவையில்லை, எனவே நபர் பெரும்பாலான பணிகளை குறைந்த செலவு மற்றும் எளிய மாற்று ஒழுங்குகளுடன் சுயாதீனமாக செய்ய முடியும்.

## சைகை மொழி மொழிபெயர்ப்பாளரின் ஆதரவைப் பெறுதல்.



படம் 1: மதிப்பீட்டாளர் காது கேளாத பயிற்சி பெறுநரிடம் நேரடியாக பேசுகிறார்,அவரால் கேட்கவோ உதட்டு அசைவை புரிந்துகொள்ளவோ முடியாது.



படம் 2: மதிப்பீட்டாளர் தனது அறிவுறுத்தல்களை காது கேளாத பயிற்சி பெறுநருக்கு தெரிவிக்க ஒரு சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் இருக்கிறார்.



படம் 3: வழிமுறைகளை தெரிவிக்க மதிப்பீட்டாளர் சைகை மொழி மொழிபெயர்ப்பாளரிடம் பேசுகிறார்.



படம் 4: மதிப்பீட்டாளர் காது கேளாத பயிற்சி பெறுநரிடம் நேரடியாகப் பேசுகிறார், மேலும் மொழிபெயர்ப்பாளர் பயிற்சி பெறுநருக்கு அறிவுறுத்தலை மொழிபெயர்க்கிறார்.

## பயிற்சி பெறுநரால், வாசிக்க முடிந்தால் எழுதப்பட்ட குறிப்புகளில் உத்தரவுகளைக் கூறுங்கள்.

*குறிப்பு:* மதிப்பீட்டு தேதியில், எந்த சைகை மொழி மொழிபெயர்ப்பாளரும் கிடைக்கவில்லை அல்லது பயிற்சி பெறுநர் முறையான சைகை மொழியில் சரளமாக இல்லாதபோது இதுவும் பொருந்தும்.



படம் 5: பெண் மதிப்பீட்டாளர் ஒரு குறிப்பேட்டில் உள்ள அறிவுறுத்தலை எழுதுகிறார்: *"தயவுசெய்து ஏற்கனவே இருக்கும் படுக்கை துணியுடன் படுக்கையை உருவாக்குங்கள்".*

படம் 6: பெண் மதிப்பீட்டாளர் அதை காது கேளாத பயிற்சி பெறுநருக்கு எழுதப்பட்ட அறிவுறுத்தலைக் காட்டுகிறார். ஆதை பயிற்சி பெறுநர் படிக்கின்றார்.



படம் 7: காது கேளாத பயிற்சி பெறுநர் மதிப்பீட்டாளர் அளித்த அறிவுறுத்தலின் படி படுக்கையை தயார்செய்கிறார்.

## பயிற்சி பெறுநர் உதட்டசைவைப் பார்த்து விளங்கிக்கொள்ளும் பொருட்டு சாதாரணமாகவும் தெளிவாகவும் பேசுங்கள்.



படம் 8: ஆண் மதிப்பீட்டாளர் மிக மெதுவாக கூறுகிறார்: *"நீங்கள் எப்படி ஒரு விருந்தினர் உள்ளிருக்கும் அறைக்குள் நுழைவீர்கள் என்பதைக் காட்டுங்கள்"*, இது பயிற்சி பெறுநருக்கு உதட்டசைவைப் பார்த்து விளங்கிக்கொள்வதற்குச் சிரமங்களை ஏற்படுத்துகிறது.




படம் 9: ஆண் மதிப்பீட்டாளர் ஒரு சாதாரண வேகத்தில் கூறுகிறார்: *"நீங்கள் ஒரு உபயோகத்தில் உள்ள அறைக்குள் எப்படி நுழைவீர்கள் என்பதைக் காட்டுங்கள்"*. பயிற்சி பெறுநர் உதட்டசைவைச் சரியாக விளங்கிக் கொண்டு அறிவுறுத்தலை இயக்க முடியும்.

ஒரு விருந்தினர் அறைக்குள் இருக்கிறாரா என்று காது கேளாத பயிற்சிபெறுநருக்கு கேட்க முடியாது என்பதால், அறிவுறுத்தலைச் செயல்படுத்த முன்மொழியப்பட்ட மாற்றங்கள் 1 / கதவு பிடியில் '*அழகுக் கலை அறை*' (அறைகளைச் சுத்தம் செய்யுங்கள்) எனும் அட்டையை மாட்டுதல், 2 / அறைக்குள் இருக்கும் விருந்தினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்ட, அறைக்குள் நுழைவதற்கு முன் இரு முறை முறை கதவைத் தட்டுதல்.




படம் 10: ஆண் மதிப்பீட்டாளர் சொல்வதை பெண் பயிற்சி பெறுநரால் உதட்டு அசைவை வைத்து படிக்க முடியாது, ஏனெனில் அவர் தனது குறிப்புப் புத்தகத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார், மேலும் அவரது முழு முகத்தையும் பயிற்சி பெறுநருக்கு காட்டவில்லை.




படம் 11: பெண் பயிற்சி பெறுநருக்கு உதட்டசைவை படிக்க முடிகிறது, ஏனெனில் ஆண் மதிப்பீட்டாளர் பேசும்போது அவளை பார்த்து பேசுகிறார்.

## பயிற்சி பெறுநர் ஓரளவு கேட்க முடிந்தால், பின்னணி இரைச்சலைக் குறைக்கவும்.




படம் 12: மாணவர்களின் பின்னணி இரைச்சலால் ஆண் மதிப்பீட்டாளர் சொல்வதைப் பெண் பயிற்சி பெறுநரால் தெளிவாகக் கேட்க முடியவில்லை.




படம் 13: ஆண் மதிப்பீட்டாளர் சொல்வதைப் பெண் பயிற்சி பெறுநர் தெளிவாகக் கேட்கும் வகையில் பின்னணி இரைச்சல் குறைக்கப்படுகிறது.

## உங்கள் கையை அசைக்கவும் அல்லது பயிற்சி பெறுநரின் கவனத்தை ஈர்ப்பதற்கு அவரது தோளில் லேசாகத் தட்டுங்கள்.





### ஆங்கிலத் தொடர்பாடல்

- காது கேளாதவர்களுக்கு, மதிப்பீட்டாளர் ஒரு ஆங்கில வார்த்தையின் எழுதப்பட்ட வடிவத்தை அங்கீகரிக்கும்படி கேட்கலாம். காது கேளாதவர்களுக்கு பேசும் வடிவத்துடன் பொருந்த வாய்ப்பு அரிதாகவே உள்ளது. காது கேளாதவர்கள் ஆங்கிலம் பேசும் வடிவத்தைக் கற்றுக்கொள்வதில்லை.
- ஓரளவு கேட்கவும் பேசவும் கூடிய பயிற்சி பெறுநர்களுக்கு, சிங்கள / தமிழ் சொற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க மதிப்பீட்டாளர் கேட்கலாம். (அல்லது மாறாக).

# இடுப்பிற்கு மேல் செயற்பாட்டில் அல்லது இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்

வளைத்தல், மண்டியிடுதல், குந்துதல் அல்லது தோள்பட்டைக்கு மேலே செல்வதில் சிரமம் உள்ள பயிற்சி பெறுநருக்கு துப்புரவு அல்லது படுக்கை தயாரிக்கும் பணிகளைச் செய்ய ஏற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியுங்கள்.



படம் 16: பெண் பயிற்சி பெறுநர் படுக்கைக்கு அடியில் சுத்தம் செய்ய உருளும் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார், அதனால் அவள் குனியத் தேவையில்லை.



படம் 17: பெண் பயிற்சி பெறுநர் ஒரு உருளும் நாற்காலியில் உட்கார்ந்து, அறையில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டியை சுத்தம் செய்வதால் அவள் வளையத் தேவையில்லை.



படம் 18: பெண் பயிற்சி பெறுநர் ஒரு நீண்ட கைப்பிடியுடைய தும்புத்தடியையும் பிடியுயர்ந்த குப்பைச் சவலையும் பயன்படுத்தி தரையைத் துடைக்கிறார், எனவே அவள் குனியத் தேவையில்லை.



படம் 19: பெண் பயிற்சி பெறுனர் நீண்ட கைப்பிடியுடன் கூடிய ஒரு துப்புரவு தூரிகையைப் பயன்படுத்தி குளியலறைத் தளத்தை சுத்தம் செய்கிறார், எனவே அவர் குனிய தேவையில்லை.



படம் 20: பெண் பயிற்சி பெறுநர் ஒரு **பற்றிப் பிடிப்பான்** கருவியை பயன்படுத்தி, குளியலறையில் தரையில் கிடைக்கும் பயன்படுத்தப்பட்ட துவாயை எடுக்கிறார்.



படம் 21: பெண் பயிற்சி பெறுநர் குளியலறை பகுதியை சுத்தம் செய்ய **நீண்ட கைப்பிடியுடன் கூடிய தூரிகையை** பயன்படுத்துகிறார்.



படம் 22: பெண் பயிற்சி பெறுநர் குளியலறையில் தொட்டிலப் பகுதி மற்றும் கண்ணாடியை கண்காடிக்கு அருகில் செல்லவும் சுத்தம் செய்யவும் **இரண்டு படி நாற்காலியை** பயன்படுத்துகிறார், இது தோள்பட்டைக்கு மேலே உள்ள நகர்வைக் கட்டுப்படுத்துகிறது. குறுகிய உயரமுள்ளவர்களுக்கு நாற்காலி பயனுள்ளதாக இருக்கும்.



படம் 23: பெண் பயிற்சி பெறுநர் குளியலறையில் பயன்படுத்திய துவாய்களை அகற்றிப் புதிய துவாய்கள் கொண்டு மீள்நிரப்ப **இரண்டு படி நாற்காலியை** பயன்படுத்துகிறார், இது தோள்பட்டைக்கு மேலே உள்ள நகர்வைக் கட்டுப்படுத்துகிறது. குறுகிய உயரமுள்ளவர்களுக்கு நாற்காலி பயனுள்ளதாக இருக்கும்.



படம் 24: ஆண் பயிற்சி பெறுநர் மெத்தையைத் தூக்கப் **படுக்கை மெத்தை தூக்கும் இயந்திரத்தைப்** பயன்படுத்துகிறார். இது குறைபாடுகள் உள்ளவர்கள் மற்றும் இல்லாதவர்களுக்கு முதுகு, கழுத்து, தோள்பட்டை மற்றும் கைகளில் காயம் ஏற்படுவதைத் தடுக்கிறது.





படம் 25: ஆண் பயிற்சி பெறுநர் ஒரு **படுக்கை மெத்தை தூக்கியைப்** பயன்படுத்தி படுக்கை விரிப்பை சீர்செய்வதற்கும் சரியாக ஒழுங்கமைப்பதற்கும் பயன்படுத்துகிறார்.

## கனமான பொருட்களை தூக்குவதற்கும் நகர்த்துவதற்கும் சிரமம் உள்ள பயிற்சி பெறுநர்கள் படுக்கை தயாரிக்கும் பணியைச் செய்வதற்கு வேறு முறையைப் பயன்படுத்துவதற்கு அனுமதியுங்கள்.



பாரம்பரிய முறையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, பயிற்சி பெறுநர் கீழே விளக்கப்பட்டுள்ளபடி படி - 6 “உருட்டல் முறையை” பயன்படுத்தி டூவட் உறையை மாற்றுகிறார். (விக்கிஹோ “உருட்டும் முறையைப் பயன்படுத்தி டூவட்டை மாற்றுதல்”: https://www.wikihow.com/Change-a-Duvet-Cover)





பயிற்சி பெறுநர் படுக்கை விரிப்பினை (டுவட்) மாற்றுவதற்கு 6 உருட்டும் முறையினை 6 படிமுறைகளாகப் பாயன்படுத்துகிறார். இதன்போது படுக்கை விரிப்பினை தோள்பட்டைக்குமேல் தூக்கும் தேவை ஏற்படாது. 1. படுக்கை விரிப்பின் உட்பகுதி வெளியில் உள்ளவாறு திருப்பி அதன் திறந்திருக்கும் பகுதி கட்டிலின் அடிப்பகுதியில் உள்ளவாறு. 2.மேல் மூலையில் படுக்கை விரிப்பினை பிரித்தல். 3. சிறிய கயிற்றை போல இறுக்க இருப்பது போல்.4. டுவற் மற்றும் அதன் உறையை உருட்டுக.5. டுவற் உறையின் திறந்திருக்கும் பகுதில் உங்கள் கைகளை விட்டு உள் வெளி மாற்றிக்கொள்க. 6. டுவற்றினையும் அதன் உறையினையும் பழைய நிலைக்கு கொண்டுவரல்.

## அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்

### தெளிவான மற்றும் எளிமையான மொழியையும் பயிற்சியின் போது பயன்படுத்தப்படும் சொற்களையும் குறிப்பிடவும்.



படம் 28: மதிப்பீட்டாளர் அறிவுறுத்தலை அளிக்கிறார்: *“நீங்கள் ஒரு அறையை சுத்தம் செய்வதற்காக எவ்வாறு உள்ளே செல்வீர்கள் என்பதை காட்டுங்கள்?”*




படம் 29: படி 1 - கதவின் முன் நின்று, மதிப்பீட்டாளர் *“தயவுசெய்து சென்று அறையை சுத்தம் செய்யுங்கள்”* என்ற அறிவுறுத்தலைக் கொடுத்து, *“நீங்கள் முதலில் என்ன செய்வீர்கள்?”* என்று கேட்கிறார்..
படி 2 - பயிற்சி பெறுநர் *“வீட்டு பராமரிப்பு”* என்று அறிவித்து கதவைத் தட்டுகிறார், மேலும் வீட்டுப் பராமரிப்பை அறிவித்த 15 விநாடிகளுக்குப் பிறகு மீண்டும் கதவைத் தட்டுகிறார்..
படி 3 - பதில் இல்லாததால்,” *ஹவுஸ் கீப்பிங்”* என்று அறிவித்துக்கொண்டு கதவைத் திறந்து துப்புரவு தள்ளுவண்டியுடன் நுழைகிறார்.







படம் 30: படி 1 - மதிப்பீட்டாளரின் வினாக்களை எளிதான மொழியிலும் மிகவும் நடைமுறை வழியிலும் சேர்ப்பதற்காக நடைமுறை மதிப்பீட்டின் போது பயிற்சியாளர் இருக்கிறார்.
படி 2 - மதிப்பீட்டாளர் அறிவுறுத்தலை அளிக்கிறார்: *"நீங்கள் ஒரு அறையை சுத்தப்படுத்த எவ்வாறு அணுகுவீர்கள்?*
படி 3 - பயிற்சியாளர், அறைக்கு முன்னால் நின்று, *"தயவுசெய்து சென்று அறையை சுத்தம் செய்யுங்கள்"* என்ற கேள்வியை எளிதாக்குகிறார், பின்னர் கேட்கிறார்: *"முதலில் நீங்கள் என்ன செய்வீர்கள்?"*, பின்னர், நீங்கள் என்ன செய்வீர்கள்?

## ஆங்கிலத் தகவல்தொடர்புக்கு, பயிற்சியின் போது கற்பிக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களை முடிந்தவரை கவனியுங்கள்.



படம் 31: மதிப்பீட்டின் போது பயிற்சியின் போது பயிற்சி பெறுநருக்கு கற்பிக்கப்பட்ட ஆங்கில சொற்களின் பட்டியல், படங்களுடன் உள்ளது. மதிப்பீட்டாளர் சில படங்களை சுட்டிக்காட்டி, பயிற்சி பெறுநரை ஆங்கிலத்தில் பெயரிடுமாறு கேட்கிறார், அதாவது காலியான அறை, தங்கியுள்ள அறை அறை, வெளியேறும் அறை அறை, பாதுகாப்பு பெட்டி, சிறிய மதுபானசாலை, துவாய், நீச்சல் தடாகம், ஷம்பு, சவர்க்காரம் போன்றவை. (vacant room, occupied room, departure room, safety box, mini-bar, towel, swimming pool, shampoo, soap )


| | | | | |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| யாரும் இல்லாத உள்ள அறை | விருந்தினர் தங்கியிருக்கும் அறை | விருந்தினர் இருந்து புறப்பட்ட அறை | பாதுகாப்பு பெட்டி | சிறு மதுபானசாலை |
|  |  |  |  |  |
| துடைக்கும் துணி | ஷம்பு | சவர்க்காரம் | படுக்கை விரிப்பு | கழிவறைக் காகிதம் |

## ஒரு அறையை சுத்தம் செய்ய வேறு முறையைப் பயன்படுத்த அனுமதிக்கவும்.

clockwise | Anti-clockwise



படம் 32: பயிற்சியின் போது கற்பிக்கப்பட்ட *"விருந்தினர் தங்கியுள்ள அறை மற்றும் குளியலறை சுத்தம் சரிபார்ப்பு பட்டியல்"* அடிப்படையில் விருந்தினர் தங்கியுள்ள அறையை பயிற்சி பெறுநர் சுத்தம் செய்கிறார்.



படம் 33: பயிற்சி பெறுநர் விருந்தினர் தங்கியுள்ள அறையை *"கடிகாரத் திசையில் சுத்தம் செய்யும் முறையை"* பயன்படுத்தி சுத்தம் செய்கிறார், மேலே தொடங்கி கீழே செல்கிறார், மேற்பரப்புகளைத் தவிர்க்கவோ அல்லது தவறவிடவோ கூடாது.

## பயிற்சியின் போது பயன்படுத்தப்படும் அதே உபகரணங்கள் மற்றும் தயாரிப்புகளுடன் மதிப்பீட்டை நடத்த அனுமதியுங்கள். (அதாவது பழக்கமான அமைப்பு)



படம் 34: அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநர் குழப்பமடைந்து கவலைப்படுகிறார், ஏனெனில் டிராலியில் உள்ள, ரசாயன சுத்திகரிப்பான்கள் மற்றும் கருவிகள் பயிற்சியின் போது அவர் பயன்படுத்தியதை விட வித்தியாசமாகத் தெரிகின்றன.



படம் 35: அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநர் அறிவுறுத்தலின் படி அறையை சுத்தம் செய்ய மிகவும் வசதியாக உணர்கிறார், ஏனெனில் தயாரிப்புகள் மற்றும் கருவிகள் அவர் பயிற்சியின் போது பயன்படுத்தியவை.

## துப்புரவு பணிகளைச் செய்வதற்கு வண்ண-குறியீட்டு அல்லது காட்சிச் சின்னங்களுக்கான குறிப்பை அனுமதிக்கவும்




படம் 36: ரசாயன சுத்திகரிப்பானை தெரிவுசெய்ய பயிற்சி பெறுநர் வியாபாரப் பெயரைப் பார்க்கிறார்.



படம் 37: ரசாயன சுத்திகரிப்பானை தெரிவுசெய்ய பயிற்சி பெறுநர்ந வண்ண ஸ்டிக்கரைப் பார்க்கிறார்: உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| குளியலறை / கழிப்பறை மேற்பரப்புக்கான வெள்ளை வண்ண ஸ்டிக்கர் | கண்ணாடி மேற்பரப்புகளை சுத்தம் செய்வதற்கான நீல வண்ண ஸ்டிக்கர் | அறை மேற்பரப்பை சுத்தம் செய்வதற்கான பச்சை நிற ஸ்டிக்கர் | குளியலறைத் தொட்டி, மற்றும் சுவர்களை சுத்தம் செய்வதற்கான மஞ்சள் நிற ஸ்டிக்கர் |



படம் 38: பயிற்சி பெறுநருக்கு எழுதப்பட்ட படிவம், அறை எண் மற்றும் அறைகளின் நிலையை குறிக்கும். (அதாவது காலியான அறை, தங்கியிருக்கும் அறை, வெளியேறும் அறை).



படம் 39: பயிற்சி பெறுநர் சுத்தம் செய்வதற்கு அறைகளின் நிலை குறித்த காட்சி சின்னங்களைக் கொண்ட ஒரு படிவத்தைப் பார்க்கிறார்.



படம் 40: பராமரிப்புச் சரிபார்ப்புப் பட்டியலைப் பார்த்து, விருந்தினர் வெளியேறும் அறையை சுத்தம் செய்யும் பணியைப் பயிற்சி பெறுநர் முடிக்கிறார்.



படம் 41: காட்சி சின்னங்கள், அதாவது படுக்கை தொகுதி / படுக்கைப் பரவல், ஏர் குளிரூட்டி, தொலைக்காட்சி / தொலைபேசி, விளக்குகள், கதவு, கழிப்பறை, தொட்டி, சுவர்கள், காற்றோட்டம் ஆகியவற்றைக் கொண்ட பராமரிப்புப் சரிபார்ப்பு பட்டியலைப் பார்த்து, நபர்கள் வெளியேறும் அறையை சுத்தம் செய்யும் பணியை பயிற்சி பெறுநர் முடிக்கிறார்.

# விடுதிப் பணியாள் பாடநெறி

## பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான எடுத்துக்காட்டுகள்



பகுதி 3.02

## பொருத்தமான மாற்று ஒழுங்குகள்

நடைமுறை மதிப்பீடு

## 3.2. விடுதி பணிப்பெண் / பணியாள் பாடநெறி - பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான எடுத்துக்காட்டுகள்



மட்டக்களப்பில் இருந்து வந்த அறை உதவியாளர் பயிற்சி பெற்றவர்கள் - *MIANI technical Institute*

### தேர்ச்சி அலகுகளின் பட்டியல்

| இல | தேர்ச்சி அலகுகளின் பட்டியல் |
|---|---|
| 01 | ஆங்கிலத் தொடர்பு உள்ளிட்ட தொழில் திறன் |
| 02 | தனிப்பட்ட சீர்ப்படுத்தல், சுகாதாரம் மற்றும் பணியிட பாதுகாப்பைப் பேணுதல் |
| 03 | உணவு மற்றும் பான சேவைக்கு mise-en-இடத்தை மேற்கொள்ளுதல் |
| 04 | அறைகளுக்கு உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல் |
| 05 | சிறு மதுபானச் செயல்பாடு தொடர்பான செயல்பாடுகளைச் செய்தல் |
| 06 | cocktails தயார் செய்து பரிமாறல் |
| 07 | விருந்து செயல்பாடுகளை மேற்கொள்ளுதல் |

### தகுதித் தர நிலைகளை பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான மாற்று ஒழுங்குகளிலிருந்து யார் பயனடையலாம்?

உலகெங்கிலும் உள்ள சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் கீழேயுள்ள அட்டவணை, இயலாமை / செயல்பாட்டு வரம்புகள் குறித்த ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது. பொருத்தமான மாற்று ஒழுங்குகளை வழங்கினாலும் கூட ஒரு பணியாளர் ஒரு சில அடிக்கு குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும் பொருட்களின் விவரங்களைக் காண வேண்டும். பார்வைக்குறைபாடு கொண்ட ஒரு நபர் அல்லது பார்வையற்றவர் தகுதித் தர நிலைகளை பூர்த்தி செய்ய முடியாமல் போகலாம் - **இருப்பினும், வெவ்வேறு நபர்களுக்கு ஏற்ப மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.**

விடுதி பணிப்பெண்/ பணியாள் பாடநெறி

- கேட்டல் குறைபாடுடைய அல்லது காது கேளாத பயிற்சி பெறுநர்
- இடுப்பிற்கு மேல் செயற்பாட்டில் அல்லது இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்
- அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்

## கேட்டல் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்.

தகவல்தொடர்புத் தடைகளில் இருந்து வெளிவரல் - பயிற்சி பெறுநரின் திறன்கள் மற்றும் செயல்திறனை முழுமையாக ஆராய்வதற்குத் தகவல்தொடர்பு பெறுகிறது. மதிப்பீட்டின் போது சம வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கு வெவ்வேறு தகவல்தொடர்பு வழிகளைப் பயன்படுத்தலாம்: சைகை மொழி, உதடு வாசிப்பு, எழுதப்பட்ட குறிப்புகள்.

தகவல்தொடர்பு என்பது ஒரு பணிப்பெண் / பணியாளரின் இன்றியமையாத செயல்பாடு மற்றும் பொருத்தமான மாற்று ஒழுங்குகளை வழங்குவதன் மூலம் நிவர்த்தி செய்வதற்கான மிகத் தெளிவான சவாலாகும்.

### சைகை மொழி மொழிபெயர்ப்பாளரின் ஆதரவைப் பெறுங்கள்.




படம் 1: கேட்டல் திறனற்ற, கேட்கவோ, உதட்டசைவை வாசிக்கவோ முடியாத பெண் பயிற்சிபெறுநரிடம் மதிப்பீட்டாளர் நேரடியாக பேசுகின்றார்.



படம் 2: மதிப்பீட்டாளர் தனது அறிவுறுத்தல்களை கேட்கும் திறநற்ற பயிற்சி பெறுநரிடம் தெரிவிக்க ஒரு சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் இருக்கிறார்.




படம் 3: மதிப்பீட்டாளர் சைகை மொழி மொழிபெயர்ப்பாளரிடம் நேரடியாகப் பேசுகிறார்: *“தயவுசெய்து அவளிடம் மேசையை ஒழுங்குபடுத்தச் சொல்லுங்கள்.”*




படம் 4: மதிப்பீட்டாளர் கேட்கும் திறனற்ற பயிற்சி பெறுநரிடம் நேரடியாக பேசுகிறார். *“தயவுசெய்து மேசையை ஒழுங்கு செய்யுங்கள்”*, மற்றும் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் பயிற்சி பெறுநருக்கு அறிவுறுத்தலை மொழிபெயர்க்கிறார்.

## பயிற்சி பெறுநரால் படிக்க முடிந்தால் எழுதப்பட்ட குறிப்புகளில் உள்ள வழிமுறைகளைக் கூறுங்கள்.

*குறிப்பு: மதிப்பீட்டு திகதியில் எந்த சைகை மொழி மொழிபெயர்ப்பாளரும் கிடைக்காதபோது அல்லது பயிற்சி பெறுநர் முறையான சைகை மொழியில் சரளமாக இல்லாதபோது இதுவும் பொருந்தும்.*



படம் 5: மதிப்பீட்டாளர் ஒரு தாளில் ஒரு அறிவித்தலை எழுதுகிறார்: “தயவுசெய்து மேசையை ஒழுங்கமையுங்கள்”.



படம் 6: மதிப்பீட்டாளர் அதைப் படிக்கக்கூடிய கேட்கும் திறனற்ற பயிற்சி பெறுநருக்கு எழுதப்பட்ட அறிவுறுத்தலைக் காட்டுகிறார்.



படம் 7: கேட்டல் குறைபாடுடைய பயிற்சி பெறுநர் மதிப்பீட்டாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சாப்பாட்டு மேசையினை அமைகின்றார். மற்றும் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் பயிற்சி பெறுநருக்கு அறிவுறுத்தலை மொழிபெயர்க்கிறார்.

## பயிற்சி பெறுநர் உதட்டசைவை வாசிக்கும் பொருட்டு சாதாரணமாகவும் தெளிவாகவும் பேசுங்கள்.



படம் 8: பெண் மதிப்பீட்டாளர் மிக மெதுவாக *“ஒரு வாடிக்கையாளருக்கு நீங்கள் எப்படி வரவேற்பு அளிப்பீர்கள், உணவு பரிமாறுவீர்கள் என்பதை எனக்குக் காட்டுங்கள்”* என்று கூறுகிறார், பயிற்சி பெறுனருக்கு திகதியில் சிரமப்படுகின்றார். (பயிற்சி பெறுநரின் முகபாவனை: மதிப்பீட்டாளர் என்ன கேட்கிறார் என்பது அவளுக்கு புரியவில்லை.)




படம் 9: படி 1 - பெண் மதிப்பீட்டாளர் பொதுவாக *“நீங்கள் வாடிக்கையாளருக்கு எப்படி வரவேற்பு அளிப்பீர்கள், உணவு பரிமாறுவீர்கள் என்பதைக் காட்டுங்கள்”* என்று கூறுகிறார், மேலும் பயிற்சி பெறுநரால் உதட்டசைவைச் சரியாக விளங்கிக்கொள்கிறார்.

படி 2 - பயிற்சி பெறுநர் அறிவுறுத்தலின் படி செயல்படுகிறார்.




படம் 10: பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பதை பெண் பயிற்சி பெறுநரால் உதட்டசைவைப் பார்த்து விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர் தனது முகத்தில் பாதியை மட்டுமே பயிற்சி பெறுநருக்கு காட்டுகிறார்.



படம் 11: முகத்தை தெளிவாக காண்பதன் மூலம் பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறாள் என்பதை பெண் பயிற்சி பெறுநரால் உதட்டசைவைப் பார்த்து விளங்க முடிகிறது.

## பயிற்சி பெறுநர் ஓரளவு கேட்க முடிந்த அளவு பின்னணி இரைச்சலைக் குறையுங்கள்.




படம் 12: பின்னணி இரைச்சலால் பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பதை ஆண் பயிற்சி பெறுநரால் தெளிவாகக் கேட்க முடியவில்லை.




படம் 13: மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பதை பயிற்சி பெறுநர் தெளிவாகக் கேட்க குறைந்தபட்ச பின்னணி இரைச்சல் உள்ளது.

## பயிற்சி பெறுநரின் கவனத்தை ஈர்க்க உங்கள் கையை அசைக்கவும் அல்லது அவரது தோளில் லேசாக தட்டவும்.



படம் 14



படம் 15

## பணியாளர் / பணிப்பெண் பணிகளைச் செய்ய வேறு தகவல்தொடர்பு முறையைப் பயன்படுத்த அனுமதிக்கவும்.

*வாடிக்கையாளர்களை வரவேற்று உத்தரவுகளைப் பெறுதல்:*



படம் 16: அவர் மாதிரி வாடிக்கையாளரை அணுகும்போது, கேட்கும் திறனற்ற பயிற்சி பெறுநர் முதலில் வாடிக்கையாளருக்கு தான் கேட்கும் திறனற்றவர் என்பதை அறிவிக்கும் பொருட்டு *“ஹலோ, எங்கள் உணவகத்திற்கு வருக. என் பெயர் ஷானக, நான் காது கேளாதவன். உங்கள் மேஜைக்கு உங்களை அழைத்துச் செல்கிறேன், தயவு செய்து வாருங்கள்.”* என்றெழுதிய குறிப்பு அட்டையைக் காட்டுவார்..



படம் 17: வழக்கமான பட்டியலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, கேட்கும் திறனற்ற பயிற்சி பெறுநர் சில காட்சி அட்டைகளுடன் ‘மாதிரி வாடிக்கையாளரை அணுகுகிறார்.உணவு மற்றும் பானங்களை எவ்வாறு உத்தரவு செய்வது என்பதைக் காட்டும் 1ஆவது அட்டை,பில்லை எவ்வாறு கேட்பது என்பதைக் காட்டும் 1 அட்டை மற்றும் கடைசியாகப் பணியாளரை எவ்வாறு அணுகுவது என்பதைக் காட்டுகிறது.



படம் 18: கேட்கும் திறனற்ற பயிற்சி பெறுநர் உத்தரவு செய்யத் தயாராக இருக்கும்போது கையை அசைக்கும்படி மாதிரி வாடிக்கையாளருக்கு அறிவிக்கிறார்.




படம் 19: உத்தரவு செய்வதற்காக மாதிரி விருந்தாளி உணவுப் பட்டியலில் உள்ள படங்களை சுட்டிக்காட்டுகிறார். உத்தரவை உறுதிப்படுத்த பயிற்சி பெறுநர் தலையை அசைக்கிறார்.



படம் 20: உத்தரவை நிறைவேற்ற ‘மாதிரி வாடிக்கையாளர்’ ஏதாவது குடிக்க விரும்புகிறாரா என்பதை அறிய பயிற்சி பெறுநர் சில எளிதான கை சைகைகளைச் செய்கிறார்.



படம் 21: பில்லைச் செலுத்த, கேட்கும் திறனற்ற வேட்பாளர் ‘மாதிரி வாடிக்கையாளருக்கு’ “பில் செலுத்துதல்’ என்ற பெயரில் உள்ள காட்சி அட்டையை “பில்லைப் பிரிக்கவும்’, “அட்டை மூலம் பணம் செலுத்துதல்’, பணமாகச் செலுத்துதல் ’என்பதைக் காட்டுகிறது.

| பற்றுச்சீட்டிற்ப் பணம் செலுத்துதல் | | |
|---|---|---|
|  |  |  |
| பில்லைப் பிரிக்கவும் | பணம் மூலம் செலுத்துதல் | அட்டை மூலம் பணம் செலுத்துதல் |

*சமையலறை /மதுபானசாலையிலிருந்து இருந்து உணவு மற்றும் குடிவகைகளைப் பெற்றுக்கொள்ளல்.*



படம் 22: மணிக்குப் பதிலாக, காது கேளாத வேட்பாளர் உணவக அறையை அடிக்கடி பார்த்துக்கொள்கிறார், இதனால் சமையலறையிலிருந்தோ அல்லது சிறு மதுபானசாலையிலிருந்தோ வரும் கை சமிக்ஞையை அவர் கவனிக்க முடியும். வெவ்வேறு கை சமிக்ஞைகள் உள்ளன: 'உணவு தயார் +மேசை எண்', 'தயார்+ மேசை எண்', 'பில் தயார்'.

### ஆங்கிலத் தொடர்பாடல்

- காது கேட்கும் திறனற்றவர்களுக்கு, மதிப்பீட்டாளர் ஒரு ஆங்கில வார்த்தையின் எழுதப்பட்ட வடிவத்தை அடையாளம் காணும்படி கேட்கலாம். கேட்கும் திறனற்றவர்கள பேச்சு வடிவத்தைத் தெரிந்து வைத்திருப்பதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது. காது கேட்கும் திறனற்றவர்கள் ஆங்கிலத்தின் பேசும் வடிவத்தைக் கற்றுக்கொள்வதில்லை.
- ஓரளவு கேட்கவும் பேசவும் கூடிய பயிற்சி, சிங்கள அல்லது தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குமாறு மதிப்பீட்டாளர் கேட்கலாம்.

## இடுப்பிற்கு மேல் அல்லது இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்கள்.

### பணிப்பெண் / பணியாளர் பணிகளைச் செய்ய பல்வேறு முறைகளைப் பயன்படுத்த அனுமதித்தல்.

*மேசையை தயார்ப்படுத்துதல்:*



படம் 23: உயரமற்ற பெண் பயிலுநர் ஒரு கையால் தட்டினை வைத்திருக்க முடியாது என்பதால், மேசையை அமைக்கும் போது தட்டை வைத்திருக்க மற்றொரு பயிலுனரினது உதவியைப் பெறுகிறாள்.



படம் 24: உயரமற்ற பெண் பயிலுநர் மேசையில் தட்டை வைக்கிறாள், அதனால் அவள் சுயாதீனமாக மேசையை அமைக்கலாம்.

*தட்டுகளை எடுத்துச் செல்லல்:*



படம் 25: பயிற்சி பெறுநர் ஒரு கையால் 3 தட்டுகளை ஒரே நேரத்தில் சுமக்கிறார்.



படம் 26: ஒரே நேரத்தில் 3 தட்டுகளை ஒரு கையால் சுமப்பதற்குப் பதிலாக, உயரமற்ற பயிற்சி பெறுநர் இரு கைகளாலும் 3 தட்டுகளை சுமந்து செல்கிறார்.



படம் 27: உயரமற்ற பயிற்சி பெறுநர் பலதடவை பயணங்களைச் செய்கிறார் மற்றும் ஒரு பயணத்தில் அவர் கொண்டு செல்லும் தட்டுகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துகிறார்.

பொதுவாக பணிப்பெண்கள் மற்றும் பணியார்களுக்கிடையே காயங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு இம் மாற்றங்கள் பொருத்தமானவை.

## மேசைகளுக்கிடையில் நகருவதற்குச் சிரமமுடைய பயிற்சி பெறுநர்கள் பயன்பாட்டிலிருக்கும் மேசைகளைச் சுத்தம் செய்தல் மற்றும் சேவை வழங்கல்.



படம் 28: உயரமற்ற பயிற்சி பெறுநர் ‘மாதிரி வாடிக்கையாளரின்’ அருகில் நின்று இருக்கும் தட்டுகளைச் சேகரித்து, மேசையின் நடுவில் இருக்கும் தட்டுகளை அடைய *“மாதிரி வாடிக்கையாளரின்”* உதவியைக் கேட்கிறார்.



படம் 29: மேசையின் குறுக்கே நகர முடியாததால் பயிற்சி பெறுநர் பானங்களை ஊற்றும்போது குவளையை தனக்கு அருகில் எடுக்கின்றார்.

## ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவியைப் பாவித்து பணியாள் சம்மந்தமான வேலைகளை செய்ய அனுமதிக்கதல்.



படம் 30: பயிற்சி பெறுநர் ஒரு **மடிக்கக்கூடிய தட்டைப்** பயன்படுத்துகிறார், உணவை எளிதில் பரிமாற அது உதவுகிறது.



படம் 31: பயிற்சி பெறுநர் சுயாதீனமாக வைத்திருக்கக்கூடிய **சிறிய தட்டினைப்** பயன்படுத்துகிறார்.



படம் 32: பயிற்சி பெறுநர் கட்டுப்படுத்துவதற்கு உதவியாக கைப்பிடியுடன் கூடிய ஒரு தட்டைப் பயன்படுத்துகிறார்.



படம் 33: ஒரு பக்க கை நகர்த்தலில் வரையறை உடைய பயிற்சி பெறுநர் பழப்பாகு, பழச்சாறுப் போத்தலை **ஒற்றைக் கையுடைய ஜாடி திறப்பானின்** (one-handed bottle opener) உதவியுடன் திறக்கிறார்.



படம் 34: ஒரு பக்க கைக் நகர்த்தலில் வரையறை உடைய பயிற்சி பெறுநர் போத்தலை **ஒற்றைக் கையுடைய ஜாடி திறப்பானின்** ( a one-handed bottle/jar opener) உதவியுடன் திறக்கிறார்.




படம் 35: முள்ளந்தண்டில் பிரச்சினையுடைய பயிற்சி பெறுநருக்கு நீண்டநேரம் நின்று குடிபானத்தைத் தயாரிப்பதில் சிரமம் இருப்பதால் மதுபானகூடத்திற்குப் பின்னால் ஒரு **நிற்கும் கதிரையின்** உதவியுடன் தயாரிக்கின்றார்.



படம் 36: செயற்கைக்கால் பொருத்தப்பட்ட ஒரு பயிற்சி பெறுநருக்கு நீண்டநேரம் நிற்பதில் சிரமம் இருப்பதால் பாரிற்கு பின்னால் நின்று **இரண்டு படிகளையுடைய ஒரு சிறு இருக்கையில்** கால்களை ஓய்வில் வைத்து குடிபானம் தயாரிக்கின்றார்.

## அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்

### தெளிவான மற்றும் எளிமையான மொழியையும், பயிற்சியின் போது பிரயோகிக்கப்படும் சொற்களையும் பயன்படுத்தங்கள்.




படம் 37: மதிப்பீட்டாளர் அறிவுறுத்தலை வழங்குகிறார்: *"அறைச் சேவையில் எவ்வாறு உணவு பரிமாறுவீர்?".*




படம் 38: மதிப்பீட்டாளர் கூறுகிறார் *"அறை 2 இற்குள் ஒரு விருந்தினர் இருக்கிறார், அவர் உணவுக்கு உத்தரவிட்டார். அதை பரிமாறுங்கள்".*

அல்லது



படம் 39: படி 1: மதிப்பீட்டாளரின் வினாவினைச் சரியாக வழிநடத்தி செயன்முறை மதிப்பீட்டை இலகுபடுத்துவதற்காக பயிற்சியாளர் செயன்முறை மதிப்பீட்டின் போது சமூகமளித்துள்ளார்.




படம் 39: படி 2: மதிப்பீட்டாளர் அறிவுறுத்தலை வழங்குகிறார். *"விருந்தினர் அறைக்கு உணவை எவ்வாறு பரிமாறுவீர்கள் என காட்டமுடியுமா?"*




படம் 39: படி 3: பயிற்சியாளர் நிலைமையை விளக்கி பின்னர் அறிவுறுத்துகிறார்: *"அறை 2 இற்குள் ஒரு விருந்தினர் இருக்கிறார், அவர் உணவுக்கு உத்தரவிட்டார். சமையலறையில் உணவு தயாராக உள்ளது. போய் அதை அவருடைய அறைக்கு ஒப்படைக்கவும்".* மதிப்பீட்டாளர் பயிற்சி பெறுநரின் செயல்திறனைக் கவனிக்கிறார்.




படம் 40: மதிப்பீட்டாளர் அறிவுறுத்தலை அளிக்கிறார்: *"நீங்கள் ஒரு வாடிக்கையாளருக்கு உணவு மற்றும் பானங்களை எவ்வாறு வரவேற்று பரிமாறுவீர்கள் என்பதைக் காட்டுங்கள்"*




படம் 41: மதிப்பீட்டாளர் கூறுகிறார் *"உணவகத்தில் ஒரு வாடிக்கையாளர் இருக்கிறார். அவரை வரவேற்க முடியுமா?"* பின்னர் பயிற்சி பெறுநர் பணியை முடிக்கும் வரை கேட்கிறார் *"நீங்கள் என்ன செய்வீர்கள் ?"*

அல்லது



படம் 42 படி1: மதிப்பீட்டாளரின் வினாவினைச் சரியாக வழிநடத்தி செயன்முறை மதிப்பீட்டை இலகுபடுத்தவதற்காக. பயிற்சியாளர் செயன்முறை மதிப்பீட்டின் போது சமூகமளித்துள்ளார்.




படம் 42 படி2: மதிப்பீட்டாளர் அறிவுறுத்தல்களை வழங்குகிறார். *"நீங்கள் எனக்கு ஒரு வாடிக்கையாளரை எவ்வாறு வரவேற்று உணவு மற்றும் பானங்களை வழங்குவீர்கள் என காண்பிக்க முடியுமா?"*




படம் 42: படி 3: பயிற்சியாளர் வினாக்களை எளிதாக்குகிறார் மற்றும் உடைக்கிறார்: *"உணவகத்தில் ஒரு வாடிக்கையாளர் இருக்கிறாரா? அவரை வரவேற்க முடியுமா? பின்னர் நீங்கள் என்ன செய்வீர்கள்?"* மதிப்பீட்டாளர் பயிற்சி பெறுநரின் செயல்திறனைக் கவனிக்கிறார்.

## பயிற்சியின் போது பயன்படுத்தப்படும் அதே அமைப்பு மற்றும் பாத்திரங்களுடன் மதிப்பீட்டை நடத்தல். (அதாவது பழக்கமான சூழலில்)



படம் 43: அறிவுத்திறன் குறைபாடுள்ள பயிற்சி பெறுநருக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரங்கள் மற்றும் அலங்காரங்களை (பச்சை வண்ணத் தகடு, தங்க வண்ணக் cutlery) வைத்து மேசையை எவ்வாறு அமைப்பது என்று தெரியவில்லை, ஏனெனில் அவர் பயிற்சியின் போது பயன்படுத்தியதை விட வித்தியாசமானவற்றைக் காண்கிறார். அதனால் அவர் குழப்பமடைந்து கோபப்படுகிறார்.



படம் 44: அறிவுத்திறன் குறைபாடுள்ள பயிற்சி பெறுநர், பயிற்சியின் போது அவர் பயன்படுத்திக் கொண்டிருந்த பாத்திரங்களுடன் (வெள்ளை வண்ணத் தகடு மற்றும் வெள்ளி வண்ணக் cutlery) மேசையை அமைத்து, மதிப்பீட்டின் போது மிகவும் வசதியாக உணர்கிறார்.

## ஆங்கிலத் தகவல் தொடர்புக்கு, பயிற்சியின் போது கற்பிக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களை முடிந்தவரை பயன்படுத்தவும்.



படம் 45: பயிற்சியின் போது பயிற்சி பெறுநருக்குக் கற்பிக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களின் பட்டியலும், படங்களும் காணப்படுகின்றன. மதிப்பீட்டின் போது அவர் சில படங்களைச் சுட்டிக்காட்டி, பயிற்சி பெறுநரை அவற்றை ஆங்கிலத்தில் சொல்லுமாறு கேட்கிறார். உதாரணம்: கத்தி, butter கத்தி, முட்கரண்டி, தேநீர் கரண்டி, மேசைக் கரண்டி, இனிப்பு கரண்டி, தட்டு, கப், சிவப்பு wine குவளை, வெள்ளை wine குவளை, தண்ணீர்க் குவளை, துடைப்பம் போன்றவை.


## வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் பணியைச் செய்ய படங்களைக்கொண்ட உணவுப் பட்டியல் அல்லது காட்சிச் சின்னங்களை அனுமதித்தல்.



படம் 46: பயிற்சி பெறுநர் ஒரு பட உணவுப் பட்டியலை பயன்படுத்துகிறார், இதனால் 'மாதிரி வாடிக்கையாளர்' உணவுப் பட்டியலில் அவர் விரும்புவதை சுட்டிக்காட்ட முடியும்.



படம் 47: பணத்தைச் செலுத்த, பயிற்சி பெறுநர் 'மாதிரி வாடிக்கையாளருக்கு' 'பில் செலுத்துதல்' 'பில்லைப் பிரித்தல்', 'அட்டை மூலம் பணம் செலுத்துதல்', பணம் மூலம் 'என்று பெயரிடப்பட்ட காட்சி அட்டைகளைக் காட்டுகிறார்.

| பற்றுச்சீட்டிற்குப் பணம் செலுத்துதல் | | |
|---|---|---|
|  |  |  |
| பில்லைப் பிரிக்கவும் | பணம் மூலம் செலுத்துதல் | அட்டை மூலம் பணம் செலுத்துதல் |

# வரவேற்பாளர் பாடநெறி

பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான எடுத்துக்காட்டுகள்



பகுதி 3.03

## பொருத்தமான மாற்று ஒழுங்குகள்

நடைமுறை மதிப்பீடு

## 3.3. வரவேற்பாளர் பாடநெறி - உதாரணமாக சில பொருத்தமான மாற்று ஒழுங்குகள்.



*Amaya Hotel இன் வரவேற்பாளர் - பாசிகுடா மட்டக்களப்பு*



*CALM Resort இன் வரவேற்பாளர் - பாசிகுடா மட்டக்களப்பு*

### தேர்ச்சி அலகுகளின் பட்டியல்

| இல | தேர்ச்சி அலகுகளின் பட்டியல் |
|---|---|
| 01 | விருந்தினரை வரவேற்றல் |
| 02 | தொலைபேசியைப் பயன்படுத்தல் |
| 03 | தகவல்களை வழங்குதலும் வாடிக்கையாளர் சேவையும் |
| 04 | தரவுகளைப் பராமரித்தல் |

### தகுதித் தரநிலைகளை அடைய பொருத்தமான மாற்று ஒழுங்குகளிலிருந்து யார் பயனடையலாம்?

உலகெங்கிலும் உள்ள சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில், சந்தர்ப்பம் வழங்கக் கூடிய மாற்றுத்திறன் கொண்ட, செயற்பாட்டு வரையறையுடைய வரவேற்பாளர்களின் வகை பற்றிய கண்ணோட்டத்தை கீழேயுள்ள அட்டவணை எடுத்துக்காட்டகிறது.

அறிவுத்திறன் குறைபாடுகள் உள்ள பயிற்சி பெறுநர் ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளை வழங்கினாலும் தகுதித் தரங்களை பூர்த்தி செய்ய முடியாமல் போக வாய்ப்புள்ளது. (குறைந்த கல்வியறிவு / எண்ணறிவு / டிஜிட்டல் திறன்கள், பதிவுகளை வைத்திருத்தல் மற்றும் தொலைபேசி அழைப்பு, தகவல் தொடர்பு போன்றவற்றை கையாள்வதில் உள்ள நினைவில் வைத்திருத்தல் தொடர்பான சிக்கல்கள் காரணமாக)

**இருப்பினும், இதை ஒரு ஆய்வாகக் கருதி மதிப்பீடு இடம்பெற வேண்டும்.**

வரவேற்பாளர் பாடநெறி

- பார்வைத் திறனற்ற அல்லது பார்வைத்திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்கள்
- கேட்டல் திறனற்ற அல்லது கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்கள்
- இடுப்பிற்கு மேல் அல்லது இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்கள்

# கேட்டல் திறனற்ற அல்லது கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்கள்.

**தொடர்பாடல்த் தடைகளைத் தாண்டுதல் -** பயிற்சி பெறுநரின் திறன்கள் மற்றும் செயல்திறனை முழுமையாக ஆராய்வதில் தொடர்பாடல் முதலிடம் வகிக்கிறது. மதிப்பீட்டின் போது சம வாய்ப்பை உறுதிப்படுத்த வெவ்வேறு தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தலாம்: சைகை மொழி, உதடு வாசிப்பு, எழுதப்பட்ட குறிப்புகள்.

தொடர்பாடல் என்பது ஒரு வரவேற்பாளரின் அத்தியாவசியச் செயல்பாடாக இருப்பதோடு பொருத்தமான மாற்று ஒழுங்குகளினூடாக தொடர்புபடுதல் வெளிப்படையாகவே மிகவும் சவாலாக அமைகிறது.

## சைகை மொழி மொழிபெயர்ப்பின் உதவியைப் பெறுதல்.



படம் 1: மதிப்பீட்டாளர் (காது கேளாத) கேட்கவோ உதட்டைப் படிக்கவோ முடியாத பெண் பயிற்சி பெறுநரிடம் நேரடியாக பேசுவார். (காது கேளாத பயிற்சி பெறுநரின் முகபாவனை: மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பது அவளுக்கு புரியவில்லை.)



படம் 2: செய்முறைச் சோதனையின்போது, மதிப்பீட்டாளர் தனது அறிவுறுத்தல்களை காது கேளாத பெண் பயிற்சி பெறுநருக்குத் தெரிவிக்க ஒரு சைகை மொழி மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்துகிறார்.



படம் 3: மதிப்பீட்டாளர் சைகை மொழி மொழி பெயர்ப்பாளரிடம் நேரடியாகப் பேசுகிறார், *"தயவுசெய்து அவளிடம் விருந்தாளியை வரவேற்கச் சொல்லுங்கள்"*.



படம் 4: மதிப்பீட்டாளர் காது கேளாத பயிற்சி பெறுநரிடம் நேரடியாகப் பேசுகிறார், மொழி பெயர்ப்பாளருடன் அல்ல. அவர் பெண் பயிற்சி பெறுநரிடம் *"தயவுசெய்து விருந்தாளியை வர வரவேற்கவும்"* என்று சொல்கிறார், மேலும் சைகை மொழி, மொழி பெயர்ப்பாளர் பயிற்சி பெறுநருக்கு அறிவுறுத்தலை மொழி பெயர்க்கிறார்.

## எழுதப்பட்ட குறிப்புகளில் உள்ள அறிவுறுத்தல்களைத் தெரிவித்தல்.

*குறிப்பு: மதிப்பீட்டுத் திகதியில் எந்த சைகை மொழி, மொழிபெயர்ப்பாளர் கிடைக்காத போது அல்லது பயிற்சி பெறுநர் முறையான சைகை மொழியில் சரளமாக இல்லாத போது இது பொருந்தும்.*



படம் 5: மதிப்பீட்டாளர் ஒரு குறிப்பேட்டில் அறிவுறுத்தலை எழுதுகிறார்: *"எப்படி நீங்கள் ஒரு விருந்தாளியை வரவேற்பீர்கள் என்பதைச் செய்து காட்டுங்கள்"*




படம் 6: மதிப்பீட்டாளர் எழுதப்பட்ட அறிவுறுத்தலை வாசிக்கக் கூடிய பயிற்சி பெறுநருக்குக் காட்டுகிறார்.




படம் 7: காது கேளாத பயிற்சி பெறுநர் அறிவுறுத்தலை நிறைவேற்றுகிறார். மாதிரி விருந்தாளியை வரவேற்று அவள் அவவுக்குக் காது கேட்காது என்றும், எழுதப்பட்ட குறிப்புகளைப் பயன்படுத்தி தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கும் ஒரு அட்டையை அவருக்குக் காண்பிக்கிறாள்.

## பின்னணி இரைச்சலைக் குறைத்து, ஓரளவு கேட்கக்கூடிய படியும் உதட்டை வாசிக்கக் கூடிய வகையிலும் சாதாரணமாக பேசுங்கள்.




படம் 8: பெண் மதிப்பீட்டாளர் மிக மெதுவாக *“நீங்கள் ஒரு விருந்தினரை எவ்வாறு வரவேற்பீர்கள் என்று எனக்குக் காட்டுங்கள்”* என்று கூறுகிறார், பெண் பயிற்சி பெறுநர் உதடுகளைப் உதடுகளைப் பார்த்து விளங்குவதில் சிரமங்களை ஏற்படுத்துகிறார். (பயிற்சி பெறுநரின் முகபாவனை: உதவியாளர் என்ன கேட்கிறார் என்பது அவளுக்கு புரியவில்லை.)




படம் 9: படி 1- பெண் மதிப்பீட்டாளர் பொதுவாக *“நீங்கள் ஒரு விருந்தினரை எவ்வாறு வரவேற்பீர்கள் என்று எனக்குக் காட்டுங்கள்”* என்று கூறுகிறார், மேலும் பெண் பயிற்சி பெறுநர் உதட்டு அசைவை சரியாகப் வின்பற்றுகிறார்.

படி 2 - கைச் சைகைகள் மற்றும் எழுதப்பட்ட குறிப்புகளைப் பயன்படுத்தி *“மாதிரி விருந்தினரை”* வரவேற்பதன் மூலம் பயிற்சி பெறுநர் அறிவுறுத்தலை நிறைவேற்றுகிறார்.



படம் 10: பின்னணி இரைச்சல் காரணமாக பெண் மதிப்பீட்டாளர் பெண் வேட்பாளர் என்ன சொல்கிறார் என்பதை பெண் பயிற்சி பெறுநரால் தெளிவாகக் கேட்க முடியவில்லை.



படம் 11: மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பதை பயிற்சி பெறுநர் தெளிவாகக் கேட்கிறார். ஏனெனில் பின்னணி இரைச்சல் குறைவாக உள்ளது.



படம் 12: பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பதை பெண் பயிற்சி பெறுநர் உதட்டு அசைவால் விளங்கிக் கொள்ளமுடியவில்லை. முடியவில்லை, ஏனெனில் அவர் தனது முகத்தின் ஒரு பகுதியை மட்டுமே பயிற்சி பெறுநருக்குக் காட்டுகிறார்.



படம் 13: பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறாள் என்பதை பெண் பயிற்சி பெறுநர் உதட்டின் அசைவினால் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஏனெனில் அவள் முகத்தை தெளிவாகக் காண முடிகிறது.

## வரவேற்பாளரின் பணிகளைச் செய்வதற்கு வேறு தகவல் தொடர்பு முறையைப் பயன்படுத்த அனுமதித்தல்.

*விருந்தினர்களை வரவேற்றல்*



படம் 14: காது கேட்காத ஆண் பயிற்சி பெறுநர் 'மாதிரி விருந்தினரை' முதலில் வரவேற்பார், 'எங்கள் ஹொட்டலுக்கு வருக' என்று குறிப்பிடும் ஒரு அட்டையை வைத்திருப்பதன் மூலம் அவர் காது கேளாதவர் என்று முதலில் அறிவித்தார். என் பெயர் ராம், நான் காது கேட்பதில் சிரமம் உள்ளவன். நான் உங்களுக்கு எவ்வாறு உதவலாம்? கையால் எழுதப்பட்ட குறிப்புகளை பரிமாறிக்கொள்வதன் மூலம் தொடர்பு கொள்ளலாம்.'



படம் 15: விருந்தினர் குறிப்புப் புத்தகத்தைப் பயன்படுத்தி அவர் முன்பதிவு செய்ததாகவும் தங்குவதற்கு விரும்புகிறார் என்றும் எழுதுகிறார்.



படம் 16: படி 1 - காது கேட்காத பயிற்சி பெறுநர் குறிப்பைப் படிக்கிறார்.




படி 2 - பயிற்சி பெறுநர் தனது முன்பதிவு மென்பொருளில் தோன்றுகிறதா என்று சரிபார்க்கிறார்.



படி 3 - விருந்தினர் நிரப்ப வேண்டிய விருந்தினர் படிவத்தை பயிற்சி பெறுநரிடம் ஒப்படைக்கிறார்.





படம் 17: காது கேட்காத பயிற்சி பெறுநர் விருந்தினருக்கு சில காட்சி அட்டைகளைக் காண்பிப்பார், உதாரணமாக அருகலை (Wifi) ஐ பெற, ஹொட்டலில் கிடைக்கும் வசதிகள் மற்றும் காலை உணவு நேரம் மற்றும் இருப்பிடம் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு.

| BREAKFAST HOURS | |
|---|---|
| திங்கள் - வெள்ளி<br>காலை 6:00 - 9.00 | சனி மற்றும் ஞாயிறு<br>காலை 7:00 - 10.00 |

## *தொலைபேசி தொடர்புகளை கையாளுதல்:*

இன்று 07:16 பிற்பகல்

● மேலதிகமாக தலையணைகள் எனது அறைக்கு தேவை. அறை இலக்கம் 103.

அதை கொண்டு வருவதில் எனக்கு மகிழ்ச்சி. இரண்டு தலையணைகள் போதுமானதா? ●

● ஆம் நன்றி.!

இன்று 08:11 பிற்பகல்

● எனக்கு ஒரு "club Sandwich" அறை இலக்கம் 111க்கு தர முடியுமா?

நிச்சயமாக, உங்களுடைய வேண்டுகோள் ஏற்றுக்கொள்ள -ப்பட்டுள்ளது. இன்னும் 20 நிமிடத்தில் தயாராகிவிடும். ●

● தயவு செய்து தக்காளியை சேர்க்கவேண்டாம்.

தக்காளி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. நன்றி ●

படம் 18: காது கேளாதவர் தொலைபேசி தொடர்புகளை கையாளுகிறார், விருந்தினர்களின் வினாக்களுக்குப் பதிலளிக்க குறுஞ்செய்தித் தகவல் முறையைப் பயன்படுத்துகிறார், அறையில் உணவு மற்றும் பிற அறைச் சேவை கோரிக்கைகளை நிர்வகிக்கிறார்.

- 'மாதிரி விருந்தினர்' அவருக்கு ஒரு குறுஞ்செய்தியை அனுப்புகிறார்.
- பயிற்சி பெறுநர் கோரிக்கைக்கு பதிலளிக்கிறார்.

தொலைபேசி அழைப்புகளைப் போலன்றி, விருந்தினர்கள் கேட்டதைப் பற்றிய பதிவு காணப்படுவதால், விருந்தினர்களின் கோரிக்கையை தவறாகப் புரிந்துகொள்வது குறித்து எந்தக் கவலையும் இல்லை,

## வரவேற்பாளர் பணிகளைச் செய்வதற்கு உதவி தொழினுட்பச் சாதனங்களைப் பயன்படுத்த அனுமதித்தல்.




படம் 19: கேட்டல் திறனில் குறைபாடுடைய பெண் பயிற்சி பெறுநர் உள்வரும் அழைப்புகளை எடுத்து, **தொலைபேசியின் ஒலி பெருக்கியைப்** பயன்படுத்தி தொலைபேசி அழைப்புகளின் சத்தத்தையும் தொனியையும் சரிசெய்யலாம்.



படம் 20: கேட்டல் திறனில் குறைபாடுடைய பெண் பயிற்சி பெறுநர் **உள்வரும் அழைப்பின் காட்சி அறிவிப்பைக்** கண்டு 3 அழைப்போசைக்கு முன் அழைப்பிற்கு பதிலளிப்பார்.




படம் 21: படி 1 - காது கேட்காத பயிற்சி பெறுநர் யாரோ கதவைத் தட்டுவதைக் காட்சி கதவு சமிக்ஞ மூலம் கவனிக்கிறார்.



படி 2 - நுழைவுக் கதவைத் திறக்க பயிற்சி பெறுநர் வரவேற்பு மேசையிலிருந்து வெளியேறுகிறார்.

## பயிற்சி பெறுநரது அவதானத்தை ஈர்ப்பதற்கு ஈர்க்க உங்கள் கையை அசையுங்கள் அல்லது அவரது தோளில் லேசாகத் தட்டுங்கள்.





# பார்வையற்றவர்கள் அல்லது குறைந்த பார்வை கொண்டவர்கள்

## வரவேற்பாளர் பணிகளைச் செய்வதற்கு உதவித் தொழினுட்பச் சாதனங்களைப் பயன்படுத்த அனுமதித்தல்.



படம் 1: குறைந்த பார்வை கொண்ட பயிற்சி பெறுநர் மின்னஞ்சலைத் தட்டச்சு செய்யும் போது **திரை உருப்பெருக்கியைப்** பயன்படுத்துகிறார். திரை உருப்பெருக்கி அளவுருக்களை மாற்றியமைக்கவும் அதாவது முன் அளவு மற்றும் பக்கத்தின் பின்னணியை மாற்றியமைக்கவும் உதவுகிறது.



படம் 2: குறைந்த பார்வை கொண்ட பயிற்சி பெறுநர் விருந்தினர் புத்தகத்தைப் படிக்க **எண்மாண அல்லது உருப்பெருக்கிக் கண்ணாடியைப்** பயன்படுத்துகிறார். ஒரு உருப்பெருக்கிக் கண்ணாடி என்பது ஒரு சிறிய இடம் பெயர்க்கக் கூடிய சாதனம் ஆகும், இது எழுத்துக்களை அவற்றின் அளவிலிருந்து 3 முதல் 20 மடங்கு பெரிதாக்குகிறது.



படம் 3: பார்வைக் குறைபாடுடைய பயிற்சி பெறுநர் ஹொட்டல் முன்பதிவு முறையை அணுக **திரை வாசித்தல் மென்பொருளை** (ஹெட்செட்டுடன்) பயன்படுத்துகிறார். ஒரு திரை வாசித்தல் மென்பொருள் செயற்கை உரை முறைமைைப் ப் பயன்படுத்தி எழுதப்பட்ட எந்த உரையையும் உரக்கப் படிக்கும்.



படம் 4: பார்வையற்ற பயிற்சி பெருநர் விறுந்தினரின் மொத்தக் கட்டணத்தை கணக்கிட **பேசும் கணிப்பானைப்** பயன்படுத்துகிறார். பேசும் கணிப்பான் பயனாளி அழுத்தும் ஒவ்வொரு எண், சின்னம் அல்லது செயல்பாட்டு விசையை சத்தமாக வாசிக்கும் உள்ளமைக்கப்பட்ட பேச்சு synthesizer ஐக் கொண்டது. இது பிரச்சினைக்கான பதிலைக் குரலில் கொடுக்கிறது.



படம் 5: குறைந்த பார்வை கொண்ட பயிற்சி பெறுநர் ஒரு **பெரிய அச்சு விசைப்பலகையைப்** பயன்படுத்தி விடுதி மென்பொருளில் விருந்தினரின் தகவலை உள்ளிடுகிறார்.



படம் 6: குறைந்த பார்வை கொண்ட பயிற்சி பெறுநர் விருந்தினர் அறைக்கு அழைக்கிறார், **பெரிய அச்சு / பிரெய்ல் விசைப்பலகைகள் கொண்ட தொலைபேசியைப்** பயன்படுத்துகிறார்.

## வரவேற்பாளர் பணிகளைச் செய்வதற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்த அனுமதித்தல்.

*விருந்தினர்களை வரவேற்றல்*
*விருந்தினர் வருகை:*



படம் 7: பார்வையற்ற பயிற்சி பெறுநர் யாராவது ஒருவர் வரவேற்புப் பகுதிக்குள் நுழைவதை **கதவின் மணி ஒலி** மூலம் கேட்கலாம்....




படம் 8: 'மாதிரி விருந்தினர்' **மேசை மணியை** ஒலிக்கிறார், பயிற்சி பெறுநர் அவரை வரவேற்று, 'எங்கள் ஹொட்டலுக்கு வருக! நான் உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்?' கேட்கிறார்.

### *விருந்தினர் அறையினுள் உணவுத் தேவைகளை குறிப்பெடுத்தல்.*




படம் 09: பயிற்சி பெறுநர் விருந்தினரின் உணவுதேவையை குறிப்பெடுக்க **தடிப்பான கோடுகளை உடைய தாளினையும் தடிப்பான எழுதுகருவியையும்** பயன்படுத்துகின்றார்.



படம் 10: பயிற்சி பெறுநர் விருந்தினர் வேண்டுகோளை **பேனா உருப்பெருக்கியை** பயன்படுத்தி எழுதுகின்றார்.




படம் 11: குறைந்த பார்வை கொண்ட பயிற்சி பெறுநர், 'மாதிரி விருந்தினர்' தொலைபேசியில் தேவைகளை சொல்லும் போது **பெரிய அச்சு உணவக உணவுப் பட்டியலைப்** பார்க்கிறார்.

## மதிப்பீட்டின் போது பயிற்சி பெறுநர், வரவேற்பு மேசை பகுதியைப் பார்வையிடவும் எளிதான நடமாடும் முறையை அமைக்கவும் அனுமதித்தல்.



படம் 12: மதிப்பீட்டிற்கு முன், பார்வையற்ற பயிற்சி பெறுநர் மதிப்பீட்டு இடத்தை சுற்றி நகரவும், அமைப்பை (நடமாடுவதற்கான பயிற்சி முறையையும்) நன்கு அறிந்திருக்கவும் உதவியாளரின் ஆதரவைப் பெறுகிறார்.



படம் 13: குறைந்த பார்வை கொண்ட பயிற்சி பெறுநர் எளிதான நகர்தலுக்காக வரவேற்பு மேசையை ஏற்பாடு செய்கிறார். கணினியின் இடமிருந்து வலமாக கணினி, விருந்தினர் பதிவு படிவங்களைக் கொண்ட மஞ்சள் நிற கோப்புறை, விருந்தினர் புகார் படிவங்களைக் கொண்ட பச்சை நிற கோப்புறை, உணவுப் பட்டியல், பேனா, பென்சில் கொள்கலன், விருந்தினர் புத்தகம் மற்றும் தொலைபேசி.



படம் 14: குறைந்த பார்வை கொண்ட பயிற்சி பெறுநர் பணிகளை எளிதில் செய்ய மேசை விளக்குகளை சேர்க்கிறார்.



படம் 15: குறைந்த பார்வை கொண்ட பயிற்சி பெறுநர் தனது பிரம்புடன் மேசையைச் சுற்றி எந்த தடையும் இல்லை என்பதை உறுதிசெய்கிறார், எனவே அவர் பணிகளை எளிதில் செய்ய முடியும்.

## இடுப்பிற்கு மேல் அல்லது இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்கள்.

### இடுப்பிற்குக் கீழ்ச் செயற்பாட்டில் வரையறைகளைக் கொண்ட பயிற்சி பெறுநர்களை, வரவேற்பாளர் பணிகளைச் செய்வதற்கு வேறுபட்ட முறையைப் பயன்படுத்த அனுமதித்தல்.







படம் 1: நிற்பதற்குப் பதிலாக, ஊன்றுகோல்களைப் பயன்படுத்தும் பெண் பயிற்சி பெறுநர் ‘மாதிரி விருந்தினரை’ வரவேற்று வாழ்த்தும் போது அமர்ந்திருக்கிறார். இது மீண்டும் மீண்டும் நிற்கும் ,அமரும் இயக்கங்களைத் தவிர்க்கிறது.

### வரவேற்பாளர் பணிகளைச் செய்ய ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்த அனுமதித்தல்.

*கைகளைப் பயன்படுத்துவதில் பிரச்சினைகள் உள்ள பயிற்சி பெறுநர்களுக்கு:*



படம் 2: வரவேற்பு மேசைக்கு பின்னால் நின்று, கைகளைப் பயன்படுத்தும் திறமை உள்ள பயிற்சி பெறுநர், விருந்தினர் மூலம் படிவத்தை பூர்த்தி செய்கிறார்,



படம் 3: வரவேற்பு மேசைக்கு பின்னால் நின்று, கைகளைப் பயன்படுத்தும் திறமையற்ற பெண் பயிற்சி பெறுநர், நிகழ்நிலை விருந்தினர் படிவத்தை விசைப்பலகை தட்டச்சு மூலம் பூர்த்தி செய்கிறார்.



படம் 4: எழுதப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு பதிலாக, பெண் பயிற்சி பெறுநர் குரல் அங்கீகார மென்பொருளைப் பயன்படுத்தி கணினியில் விருந்தினர் படிவத்தில் குரல் குரலைப் பதிவிடவும், நிரப்பவும் பயன்படுத்துகிறார்.



படம் 5: கைகளைப் பயன்படுத்தும் திறமையற்ற பெண் பயிற்சி பெறுநர் விருந்தினருக்கான அறையைத் திறக்கிறார், ஒரு முக்கிய turner key உதவியின் ஆதரவுடன் எளிதாக திரும்புவதற்கு கூடுதல் திறனை வழங்குகிறது.



படம் 6: கைத் திறமை பிரச்சினை உள்ள பெண் பயிற்சி பெறுநர் உள்வரும் அழைப்புகளுக்கு பதிலளிக்க headset பயன்படுத்துகிறார்.

## *இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்களுக்கு*



படம் 7: சக்கர நாற்காலியில் இருக்கும் பயிற்சி பெறுநர் பணிகளைச் செய்வதற்கு உயரம் குறைந்த வரவேற்பு மேசைக்குப் பின்னால் இருக்கிறார்.



படம் 8: காலை நகர்த்த முடியாத சிக்கலைக் கொண்ட பயிற்சி பெறுநரின் கொடுக்கல்-வாங்கல் இடத்திற்குப் பின்னால் **போதுமான இடவசதி** உள்ளது.



படம் 9: எளிதாக நகர்த்தவும், உள்வரும் அழைப்புகளுக்கு பதிலளித்தல், கணினியில் தட்டச்சு செய்தல் போன்ற வரவேற்பு பணிகளைச் செய்யவும் காலில் செயற்கை உறுப்பு இணைக்கப்பட்ட ஆண் பயிற்சி பெறுநர் வரவேற்பு மேசைக்கு பின்னால் **உருளும் நாற்காலியில்** அமர்ந்திருக்கிறார்.



படம் 10: காலில் செயற்கை உறுப்பு இணைக்கப்பட்ட ஆண் பயிற்சி பெறுநர் வரவேற்பு பகுதிக்கு பின்னால் நின்று, **கால் படியுள்ள சிறு மேசை** ஓய்வெடுக்கிறார்.



படம் 11: தனது உருளும் நாற்காலியில் அமர்ந்திருக்கும்போது, காலில் செயற்கை உறுப்பு இணைக்கப்பட்ட ஆண் பயிற்சி பெறுநர், வரவேற்பு பகுதியைச் சுத்தமாகப் பராமரிக்க, வளைந்து அல்லது குந்தாமல், தரையில் காகிதங்களையும் திசுக்களையும் ஒரு **பற்றிப் பிடிப்பானினி** உதவியுடன் அகற்றிக் கொண்டிருக்கிறார்..

# அழகுக்கலை
# பாடநெறி

## பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான எடுத்துக்காட்டுகள்



பகுதி 3.04

## பொருத்தமான மாற்று ஒழுங்குகள்

நடைமுறை மதிப்பீடு

## 3.4. அழகுக்கலை பாடநெறி - உதாரணமாக சில பொருத்தமான மாற்று ஒழுங்குகள்.





*Beautician-Nandima Saloon Arugambay Ampara.*

### தேர்ச்சி அலகுகளின் பட்டியல்

| இல | தேர்ச்சி அலகுகளின் பட்டியல் |
|---|---|
| 01 | பாதுகாப்பான மற்றும் இனிமையான அழகு நிலைய சூழலைப் பராமரித்தல் |
| 02 | அழகு நிலையச் சேவைகளுக்கு வாடிக்கையாளர்களைப் பெற்று தயார் செய்தல் |
| 03 | தோல் பராமரிப்புத் தயாரிப்புகளை பரிந்துரைத்தல் |
| 04 | தோல் சிகிச்சை செய்தல் |
| 05 | முகத் தோற்றத்தை மேம்படுத்த முக அலங்காரத்தைப் பயன்படுத்தல் |
| 06 | நக பராமரிப்பை வழங்குதல் |
| 07 | அழகு பராமரிப்பு பொருட்களின் விற்பனையை ஊக்குவித்தலும் ஆலோசனைகளை வழங்குதலும் |
| 08 | முடி அலங்காரப் பகுதியை நிர்வகித்தல் |

### தகுதித் தரநிலைகளை அடைய பொருத்தமான மாற்று ஒழுங்குகளிலிருந்து யார் பயனடையலாம்?

உலகெங்கிலும் உள்ள சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில், சந்தர்ப்பம் வழங்கக் கூடிய மாற்றுத்திறன் கொண்ட, செயற்பாட்டு வரையறையுடைய அழகு கலைஞர்களின் வகை பற்றிய கண்ணோட்டத்தை கீழேயுள்ள அட்டவணை வழங்குகிறது. இதில் அடங்கும் அழகு நிபுணரின் வேலைகளாக:

1 நிறத்தை அடையாளம் காண்பது மற்றும் நிறங்களின் பிரகாசம் உள்ளிட்ட வண்ண வேறுபாடுகளைப் பார்ப்பது, தெளிவாக நெருக்கமாகப் பார்ப்பது,

2 அதிக திறமை மற்றும் துல்லியமான மென்மையான, தொடுதலுடன் கருவிகள் மற்றும் தயாரிப்புகளை வைத்திருக்கவும் கட்டுப்படுத்தவும் கையாளவும் முடியும்.

3 சுகாதார மற்றும் பாதுகாப்பு தரங்களுக்கு இணங்க, இரசாயன சேர்க்கைகளோடு கூடிய அழகு சாதனப் பொருட்கள் மற்றும் ஏனைய அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்துதல்.

பார்வையற்றோருக்கோ அல்லது குறைந்த பார்வை உடையோருக்கோ, இடுப்பிற்கு மேல் வரையறைகளையும் மற்றும் அறிவுத்திறன் குறைபாடுகள் உள்ள பயிற்சி பெறுநர்களுக்கோ ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளையும் வழங்கினாலும் தகுதித் தரங்களை பூர்த்தி செய்ய முடியாமல் போக வாய்ப்புள்ளது- இருப்பினும், இதை ஒரு ஆய்வாகக் கருதி மதிப்பீடு இடம்பெற வேண்டும்.

**அழகுக்கலை பாடநெறி**

- ✓ கேட்டல் குறைபாடுடைய அல்லது முழுமையாக கேட்க முடியாத பயிற்சி பெறுநர்
- ✓ இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடையவர்கள்.

# கேட்டல் திறனற்ற அல்லது கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்கள்.

**தொடர்பாடல்த் தடைகளைத் தாண்டுதல்** - பயிற்சி பெறுநரின் திறன்கள் மற்றும் செயல்திறனை முழுமையாக ஆராய்வதில் தொடர்பாடல் முதலிடம் வகிக்கிறது . மதிப்பீட்டின் போது சம வாய்ப்பை உறுதிப்படுத்த வெவ்வேறு தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தலாம்: சைகை மொழி, உதடு வாசிப்பு, எழுதப்பட்ட குறிப்புகள்.

தொடர்பாடல் என்பது ஒரு அழகுக் கலை நிபுணரின் அத்தியாவசியச் செயல்பாடாக இருப்பதோடு பொருத்தமான மாற்று ஒழுங்குகளினூடாக தொடர்புபடுதல் வெளிப்படையாகவே மிகவும் சவாலாக அமைகிறது.

## சைகை மொழி மொழிபெயர்ப்பின் உதவியைப் பெறுதல்.




படம் 1: மதிப்பீட்டாளர் (காது கேளாத) கேட்கவோ உதட்டு அசைவைப் பார்த்து விளங்க முடியாத முடியாத பெண் பயிற்சி பெறுநரிடம் நேரடியாக பேசுவார். (காது கேளாத பயிற்சி பெறுநரின் முகபாவனை: மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பது அவளுக்கு புரியவில்லை.)



படம் 2: செய்முறைச் சோதனையின்போது, மதிப்பீட்டாளர் தனது அறிவுறுத்தல்களை காது கேளாத பெண் பயிற்சி பெறுநருக்குத் தெரிவிக்க ஒரு சைகை மொழி மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்துகிறார்.




படம் 3: மதிப்பீட்டாளர் சைகை மொழி மொழி பெயர்ப்பாளரிடம் நேரடியாகப் பேசுகிறார், *"தயவுசெய்து அவளிடம் வாடிக்கையாளரை வரவேற்கச் சொல்லுங்கள்"* (படத்தில் பேச்சுக் குமிழி இடப்படல் வேண்டும்).




படம் 4: மதிப்பீட்டாளர் மொழிபெயர்ப்பாளருடன் அல்லாது காது கேளாத பயிற்சி பெறுநரிடம் நேரடியாகப் பேசுகிறார். அவர் பெண் பயிற்சி பெறுநரிடம் *"தயவுசெய்து வாடிக்கையாளரை வரவேற்கவும்"* என்று சொல்கிறார், மேலும் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் பயிற்சி பெறுநருக்கு அறிவுறுத்தலை மொழி பெயர்க்கிறார்.

## பயிற்சி பெறுநரால் வாசிக்க முடிந்தால் எழுதப்பட்ட குறிப்புகளில் உள்ள அறிவுறுத்தல்களைக் கூறுங்கள்.

*குறிப்பு: மதிப்பீட்டுத் திகதியில் எந்தச் சைகை மொழி, மொழிபெயர்ப்பாளர் கிடைக்காத போது அல்லது பயி-ற்சி பெறுநர் முறையான சைகை மொழியில் சரளமாக இல்லாத போது இது பொருந்தும்.*



படம் 5: மதிப்பீட்டாளர் அறிவுறுத்தல்களை ஒரு காகிதத்தில் எழுதுகிறார் *“வாடிக்கையாளருக்கு ஒரு பிரெஞ்ச் மனிகியோவினை வழங்கவும்”*



படம் 06: மதிப்பீட்டாளர் எழுதிய அறிவுறுத்தலை முழுமையாக கேட்க முடியாத பெண் பயிற்சி பெறுநரிடம் காட்டுகிறார். அதை அவர் வாசிக்கிறார்.



படம் 07: முழுமையாக கேட்க முடியாத பெண் பயிற்சி பெறுநர் மதிப்பீட்டாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அவரது சேவையை செய்கின்றார்.

## பயிற்சி பெறுநரால் ஓரளவுக்குக் கேட்க முடிகின்ற போது, மற்றும் உதட்டைப் பார்த்து விளங்கிக்கொள்ளும் போது பின்னணி இரைச்சலைக் குறைத்து சாதாரணமாக பேசுங்கள்.




படம் 8: பெண் மதிப்பீட்டாளர் மிக மெதுவாக *"நீங்கள் ஒரு முக அழகுச் சிகிச்சையை. எவ்வாறு செய்கிறீர்கள் என்று எனக்குக் காட்டுங்கள்"* என்று கூறுகிறார், பயிற்சி பெறுநர் உதடுகளைப் பார்த்து விளங்கிக்கொள்வதற்கு. பயிற்சி பெறுநரின் முகபாவனை: மதிப்பீட்டாளர் என்ன கேட்கிறார் என்பது அவளுக்கு புரியவில்லை.




படம் 9: படி 1 - பெண் மதிப்பீட்டாளர் மெதுவாக *"நீங்கள் ஒரு முக அழகுச் சிகிச்சையை எவ்வாறு செய்கிறீர்கள் என்று எனக்குக் காட்டுங்கள்"* என்று கூறுகிறார், பயிற்சி பெறுநரால் உதட்டு அசைவினைச் சரியாக விளங்கிக்கொள்ள முடிகிறது. சரியாகப் படிக்க முடிகிறது.



படி 2 - பயிற்சி பெறுநர் அறிவுறுத்தலைச் செயற்படுத்துகிறார்.




படம் 10: பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பதை பெண் பயிற்சி பெறுநர் உதட்டு அசைவைப் பார்த்து விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர் தனது முகத்தில் பாதியை மட்டுமே.




படம் 11: பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பதை பெண் பயிற்சி பெறுநர் உதட்டின் அவைசைப் பார்த்து விளங்கிக்கொள்கிறார். ஏனெனில் அவர் முகத்தைத் தெளிவாகக் காணமுடிகிறது.

## பயிற்சி பெறுநரால் ஓரளவு கேட்க முடிகின்ற போது பின்னணி இரைச்சலைக் குறைத்தல்.




படம் 12: பின்னணி இரைச்சல் காரணமாக பெண் மதிப்பீட்டாளர் சொல்வதை பெண் பயிற்சி பெறுநரால் தெளிவாகக் கேட்க முடியவில்லை.




படம் 13: மதிப்பீட்டாளர் சொல்வதை பயிற்சி பெறுநர் தெளிவாகக் கேட்பதற்கு சிறு பின்னணி இரைச்சல் உள்ளது.

## வாடிக்கையாளர்களை அழகு நிலையத்திற்கு வரவேற்பதற்கும் சேவைகளை வழங்கும் பணிகளைச் செய்வதற்கும் பல்வேறு தகவல் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தவதற்கு அனுமதித்தல்.



படம் 14: அவர் ‘மாதிரி வாடிக்கையாளரை’ அணுகும் போது, காது கேளாத பயிற்சி பெறுநர் முதலில் வாடிக்கையாளருக்கு, ‘காது கேளாதவர்’ என்று ஒரு அட்டையைக் வைத்துக் காட்டுவதன் மூலம் *“ஹலோ, எங்கள் அழகு நிலையத்துக்கு வருக. என் பெயர் ஹர்’னி, எனக்கு காது கேட்காது, நான் உங்களுக்கு எப்படி உதவ முடியும்?”* என விடயத்தை வெளிப்படுத்தல்.



படம் 15: காது கேளாத பயிற்சி பெறுநர் அழகு நிலைய சேவைகளையும் விலையையும் வழங்கும் சித்திரப் பட்டியல் தொகுப்பை ‘மாதிரி வாடிக்கையாளருக்குக்’ காட்டி நெறிப்படுத்துகிறார்: ஒன்று நக பராமரிப்பு, மற்றையது பாத பராமரிப்பு, இன்னொன்று தோல் சிகிச்சைக்கு அடுத்தது அலங்காரம் செய்ய



படம் 16: ‘போலி வாடிக்கையாளர்’ அவர் விரும்பும் சேவையைச் சுட்டிக்காட்டுகிறார்: சிற்நத நகங்கள் (Classic nails)



படம் 17: காது கேளாத பயிற்சி பெறுநர் 'மாதிரி வாடிக்கையாளரிடம்' அவர் விரும்பும் நக வடிவம் மற்றும் வண்ணத்தின் வகையைக் கேட்கிறார், **காட்சி அட்டை மற்றும் வண்ணத் தட்டுகளைக்** காட்டுகிறார்.



படம் 18: காது கேளாத பயிற்சி பெறுநர் **கைச் சைகைகள் மற்றும் பானங்களின் காட்சி அட்டையைப் பயன்படுத்தி**, நகங்களை கையாளும்போது ஏதாவது குடிக்க விரும்புகிறீர்களா என்று 'மாதிரி வாடிக்கையாளரிடம்' கேட்கிறார்.



படம் 19: காது கேளாத பயிற்சி பெறுநர் **கண் தொடர்பு, முகபாவங்கள் மற்றும் கை சைகைகளைப் பயன்படுத்தி** ஒரு தோல் தயாரிப்பு பற்றி 'மாதிரி வாடிக்கையாளருக்கு' ஆலோசனை வழங்குகிறார்.

## அழகு நிலையச் சேவைகளைச் செய்வதற்கு வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதித்தல்.



படம் 20: காது கேளாத பயிற்சி பெறுநர் வாடிக்கையாளருடன் கைச் சைகை மூலம் முக சிகிச்சையைப் பெற முடியும், வாடிக்கையாளருக்கு நேராகக் கண்ணாடி வைக்கப்பட்டமைக்கு நன்றிகள்.

**பயிற்சி பெறுநரின் கவனத்தை ஈர்ப்தற்கு உங்கள் கையை அசைக்கலாம் அல்லது அவரது தோளில் லேசான தட்டுங்கள்.**



படம் 21: முழுமையாக கேட்கும் தன்மையற்ற பயிற்சி பெறுநரின் கவனத்திற்காக மதிப்பீட்டாளர் அவரது கைகளை அசைக்கின்றார்.



படம் 22: மதிப்பீட்டாளர் கவனத்தை ஈர்ப்பதற்காக முழுமையாக கேட்கும் தன்மையற்ற பயிற்சி பெறுநரின் கவனத்தை ஈர்ப்பதற்காக முதுகில் தட்டுகின்றார்.

# இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்கள்

## அழகு நிலையப் பணிகளைச் செய்ய ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்த அனுமதித்தல்.



படம் 1: ஊன்றுகோல்களைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுநர் (நீண்ட நேரம் நிற்க முடியாதவர்) 'மாதிரி வாடிக்கையாளருக்கு' முக சிகிச்சையைச் செய்கிறார், வாடிக்கையாளரின் மட்டத்தில் இருக்கவும், சுலபமாக நகரவும் **சரி செய்யக்கூடிய உருட்டல் சிறு கதிரையில்** அமர்ந்திருக்கிறார். நீண்ட காலத்திற்கு கழுத்தை அல்லது பின்புறத்தை வளைக்க முடியாத பயிற்சி பெறுநர்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கும்.



படம் 2: 'மாதிரி வாடிக்கையாளர்' மசாஜ் மேசையில் படுத்துக்கொண்டிருக்கிறார். ஊன்றுகோல்களைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுநர் (நீண்ட காலமாக நிற்க முடியாதவர்) ஒரு முக சிகிச்சையைச் செய்கிறார் **சரிசெய்யக்கூடிய உருட்டல் சிறு கதிரையில்** உட்கார்ந்து தனது வாடிக்கையாளரின் முகத்தின் அதே மட்டத்தில் இருக்கவும் சுலபமாக நகரவும் முடியும்.



படம் 3: 'மாதிரி வாடிக்கையாளரின்' பாத சிகிச்சையை நிகழ்த்தும் போது பயிற்சி பெறுநரின் முதுகுவலியைத் தவிர்க்க ஒரு **உடற்பயிற்சிப் பந்தில்** அவர் அமர்ந்திருக்கிறார்.



படம் 4: தயாரிப்புகள் அல்லது கருவிகளை எடுப்பதற்கு வளையாமல் அல்லது குந்தாமல், அதே நேரம் தோல் பராமரிப்பு சிகிச்சைக்கான கருவிகள் மற்றும் தயாரிப்புகளை எடுப்பதற்கு பயிற்சி பெறுநர் **உயரத்தை சரிசெய்யக்கூடிய தள்ளுவண்டி தட்டைப்** பயன்படுத்துகிறார்.



படம் 5: மசாஜ் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் தனது வாடிக்கையாளரை விட குறைந்த உயரமுள்ள பயிற்சி பெறுநர் அந்த உயரத்தை அடைய **படியுள்ள சிறு கதிரையைப்** பயன்படுத்துகிறார்.



படம் 6: சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுநர் **சக்கர நாற்காலியால் அணுகக்கூடிய நக சிகிச்சை மேசையைப்** பயன்படுத்துகிறார். (அதாவது உயரத்தைச் சரி செய்யக்கூடிய சக்கர நாற்காலியில் இருப்பவருக்கு திசையை மாற்றியமைக்கக் கூடியவாறான மேசை).



படம் 7: முதுகு தொடர்பான குறைபாடுள்ள ஒரு பயிற்சி பெறுநர், **நிலக் கம்பளத்தில்** நின்று 'மாதிரி வாடிக்கையாளருக்கு' (வலி மற்றும் சோர்வைக் குறைப்பதற்கு) முக அலங்காரம் செய்கிறார்.



படம் 8: முதுகு தொடர்பான குறைபாடுள்ள பயிற்சி பெறுநர், அவரது முதுகு பதட்டத்தைக் குறைப்பதற்கு மேசைக்குக் கீழே ஒரு **பாதப் பதனைப்** பயன்படுத்தி 'மாதிரி வாடிக்கையாளரின்' நக சிகிச்சையை செய்கிறார்.

## அழகு நிலையப் பணிகளைச் செய்யப் பல்வேறுபட்ட முறைகளைப் பயன்படுத்த அனுமதித்தல்.



படம் 9: பயிற்சி பெறுநர் ஒரு **மசாஜ் படுக்கையில்** (ஒரு பாத சிகிச்சை நாற்காலியில் உட்கார்ந்திருப்பதற்கு பதிலாக) **படுத்துக் கொண்ட 'மாதிரி வாடிக்கையாளரின்'** பாத சிகிச்சையைச் செய்கிறார். பாதத்திற்குச் செய்யும் மசாஜ் உயரம் குறைந்ததாகக் காணப்படுவதனால் சிறு கதிரையில் பயிற்சி பெறுநர் அமர்வதை இது தடுக்கிறது.



படம் 10: சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுநர் நகங்களைச் மசாஜ் செய்கிறார், 'மாதிரி வாடிக்கையாளர்' தனது கைகளை **சக்கர நாற்காலி மடித் தட்டு மேசையில்** வைப்பார்.



படம் 11: சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுநர் rolling stock பயன்படுத்தி அலுமாரிகளை மீளமைக்கிறார்.

# சமையல் பயிற்சி நெறி

## பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான எடுத்துக்காட்டுகள்



பகுதி 3.05

# பொருத்தமான மாற்று ஒழுங்குகள்

நடைமுறை மதிப்பீடு

## 3.5. சமையல் பயிற்சி நெறி- பொருத்தமான மாற்று ஒழுங்குகளுக்கான உதாரணங்கள்



உச்ச சமையல்காரர் பேசுகிறார், மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள பங்கேற்பாளர்



பேசுதல் மற்றும் கேட்டல் - குறைபாடுள்ள சமையல் பயிற்சியாளர்கள் *YMCA* மட்டக்களப்பு

### தேர்ச்சி அலகுகளின் பட்டியல்

| இல | தேர்ச்சி அலகுகளின் பட்டியல் |
|---|---|
| 01 | சாஸ் தயாரித்தல் |
| 02 | சாலடுகள் / தின்பண்டங்கள் /சிற்றுண்டிகளைத் தயாரித்தல் |
| 03 | சூடான உணவைத் தயாரித்தல் |
| 04 | சூடான/குளிர் பானங்கள் தயாரித்தல் |
| 05 | மீன் மற்றும் இறைச்சியை சமைத்தல் |
| 06 | ஒவ்வொரு கலாசாரத்திற்குமான விசேட உணவுகளைத் தயாரித்தல் |
| 07 | சூப்களை தயாரித்தல் |
| 08 | இனிப்புகள் மற்றும் பிரதான உணவின் பின் உண்பவற்றைத் தயாரித்தல் |

### தகுதித் தரநிலைகளை அடைய பொருத்தமான மாற்று ஒழுங்குகளிலிருந்து யார் பயனடையலாம்?

உலகெங்கிலும் உள்ள சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில், சந்தர்ப்பம் வழங்கக் கூடிய மாற்றுத்திறனுள்ள, செயற்பாட்டு வரையறையுடைய சமையல் கலைஞர்களின் வகை பற்றிய கண்ணோட்டத்தை கீழேயுள்ள அட்டவணை வழங்குகிறது. இதில் அடங்கும் சமையல் கலைஞர்களின் வேலைகளாக:

1 நிறத்தை அடையாளம் காண்பது மற்றும் நிறங்களின் பிரகாசம் உள்ளிட்ட வண்ண வேறுபாடுகளைப் பார்ப்பது, தெளிவாக நெருக்கமாகப் பார்ப்பது,

2 அதிக திறமை மற்றும் துல்லியமான மென்மையான தொடுதலுடன் கருவிகள் மற்றும் தயாரிப்புகளை வைத்திருக்கவும் கட்டுப்படுத்தவும் கையாளவும் முடியும்.

பார்வையற்றோருக்கோ அல்லது பார்வை குறைந்தவர்களுக்கோ, இடுப்பிற்கு மேல் வரையறைகள் மற்றும் அறிவுத்திறன் குறைபாடுகள் உள்ள பயிற்சி பெறுநர்களுக்கோ ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளை வழங்கினாலும் தகுதித் தரங்களைப் பூர்த்தி செய்ய முடியாமல் போக வாய்ப்புள்ளது- **இருப்பினும், இதை ஒரு ஆய்வாகக் கருதி மதிப்பீடு இடம்பெற வேண்டும்,**

**சமையல் பயிற்சி நெறி**

- ✓ கேட்டல் திறனற்ற அல்லது கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்கள்
- ✓ இடுப்பிற்கு மேல் அல்லது இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்கள்
- ✓ அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்

# கேட்டல் திறனற்ற அல்லது கேட்டல் திறனில் குறைபாடுடைய பயிற்சி பெறுநர்கள்

**தொடர்பாடல் தடைகளைத் தாண்டுதல்** - பயிற்சி பெறுநரின் திறன்கள் மற்றும் செயல்திறனை முழுமையாக ஆராய்வதில் தொடர்பாடல் முதலிடம் வகிக்கிறது . மதிப்பீட்டின் போது சம வாய்ப்பை உறுதிப்படுத்த வெவ்வேறு தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தலாம்: சைகை மொழி, உதடு வாசிப்பு, எழுதப்பட்ட குறிப்புகள்.

தொடர்பாடல் என்பது ஒரு அழகுக் கலை நிபுணரின் அத்தியாவசிய செயல்பாடாக இருப்பதோடு பொருத்தமான மாற்று ஒழுங்குகளினூடாக தொடர்புபடுதல் வெளிப்படையாகவே மிகவும் சவாலாக அமைகிறது.

## சைகை மொழி மொழிபெயர்ப்பின் உதவியைப் பெறுதல்




படம் 1: ஆண் மதிப்பீட்டாளர் (காது கேளாத) கேட்கவோ உதட்டைப் பார்த்து விளங்கிக்கொள்ள முடியாத பெண் பயிற்சி பெறுநரிடம் நேரடியாக பேசுவார்.



படம் 2: மதிப்பீட்டாளர் தனது அறிவுறுத்தல்களை காது கேளாத பயிற்சி பெறுநருக்குத் தெரிவிக்க ஒரு சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் பயன்படுத்துகிறார்.



படம் 3: ஆண் மதிப்பீட்டாளர் சைகை மொழி மொழி பெயர்ப்பாளரிடம் பேசுகிறார்: *"தயவுசெய்து பயிற்சி பெறுநரிடம் ஒரு மிளகாய் சோஸை எவ்வாறு தயாரிப்பார் என்பதைச் செய்து காட்டும்படி கேளுங்கள்".*




படம் 4: ஆண் மொழிபெயர்ப்பாளரிடமல்லாது காது கேளாத பெண் பயிற்சி பெறுநரிடம் நேரடியாகப் பேசுகிறார். அவர் பயிற்சி பெறுநரிடம் *"தயவுசெய்து நீங்கள் ஒரு மிளகாய் சோஸை எவ்வாறு தயாரிப்பீர்கள் என்பதைக் காட்டுங்கள்"* என்று சொல்கிறார், மேலும் சைகை மொழி, மொழிபெயர்ப்பாளர் பயிற்சி பெறுநருக்கு அறிவுறுத்தலை மொழி பெயர்க்கிறார்.

## பயிற்சி பெறுநரால் வாசிக்க முடிந்தால் எழுதப்பட்ட குறிப்புகளில் உள்ள அறிவுறுத்தல்களைக் கூறுங்கள்.

*குறிப்பு: மதிப்பீட்டுத் திகதியில் எந்த சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் கிடைக்காத போது அல்லது பயிற்சி பெறுநர் முறையான சைகை மொழியில் சரளமாக இல்லாத போது இது பொருந்தும்.*



படம் 5: ஆண் மதிப்பீட்டாளர் ஒரு குறிப்பேட்டில் அறிவுறுத்தலை எழுதுகிறார்: *"தயவுசெய்து பிரியாணியும் ரைட்டாவும் சாலட்டும் தயாரியுங்கள்."*



படம் 6: ஆண் மதிப்பீட்டாளர் எழுதப்பட்ட அறிவுறுத்தலை, காது கேட்காத ஆகால் வாசிக்கக்கூடிய பெண் பயிற்சி பெறுநருக்குக் காட்டகிறார்.



படம் 7: காது கேளாத பயிற்சி பெறுநர் அறிவுறுத்தலை நிறைவேற்றுகிறார். உணவு தயாரிப்பின் போது மதிப்பீட்டாளர் அவளைக் கவனிக்கிறார்.

## பயிற்சி பெறுநர் உதட்டைப் பார்த்து விளங்கக்கூடியவராயின் கூடியவராயின் சாதாரணமாகவும் தெளிவாகவும் பேசுங்கள்.




படம் 8: பெண் மதிப்பீட்டாளர் மிக மெதுவாக *“நீங்கள் எப்படி ஒரு பழக் கேக்கை உருவாக்குவீர்கள் என்று எனக்குக் காட்டுங்கள்”* என்று கேட்கிறார், பெண் பயிற்சி பெறுநருக்கு உதட்டு அசைவைப் பார்த்து விளங்கிக்கொள்வதில் சிரமங்களை ஏற்படுத்துகிறார்.




படம் 9: படி 1 - பெண் மதிப்பீட்டாளர் மெதுவாக *“நீங்கள் எப்படி ஒரு பழக் கேக்கை உருவாக்குவீர்கள் என்று எனக்குக் காட்டுங்கள்”* என்று கூறுகிறார், பயிற்சி பெறுநரால் உதட்டு அசைவைச் சரியாக விளங்கிக்கொள்ள முடிகிறது.



படம் 10: பயிற்சி பெறுநர் அறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்படுகின்றார்.



படம் 11: பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறார் என்பதை பெண் பயிற்சி பெறுநர் உதடைப் பார்த்து விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர் தனது முகத்தின் ஒரு பகுதியையே மட்டுமே காட்டுகிறார்.



படம் 12: பெண் மதிப்பீட்டாளர் என்ன சொல்கிறாள் என்பதை பெண் பயிற்சி பெறுநர் உதட்டு அசைவைப் பார்த்து விளங்கிக்கொள்கிறார். ஏனெனில் அவள் முகத்தை தெளிவாகக் காணமுடிகிறது.

## பயிற்சி பெறுநரால் ஓரளவு கேட்க முடிகின்ற போது பின்னணி இரைச்சலைக் குறைத்தல்



படம் 13: பின்னணி இரைச்சல் காரணமாக பெண் மதிப்பீட்டாளர் சொல்வதை பெண் பயிற்சி பெறுநரால் தெளிவாகக் கேட்க முடியவில்லை.



படம் 14: மதிப்பீட்டாளர் சொல்வதை பயிற்சி பெறுநர் தெளிவாகக் கேட்பதற்கு பின்னணி இரைச்சல் குறைவாக உள்ளது.

## பயிற்சி பெறுநரின் கவத்தை ஈர்ப்பதற்கு உங்கள் கையை அசைக்கலாம் அல்லது அவரது தோளில் லேசான தட்டலாம்



படம் 15: முழுமையாகக் கேட்கும் தன்மையற்ற பயிற்சி பெறுநரின் கவனத்திற்காக மதிப்பீட்டாளர் அவரது கைகளை அசைக்கின்றார்.



படம் 16: அவதானத்தை ஈர்ப்பதற்காக மதிப்பீட்டாளர் முழுமையாக கேட்கும் தன்மையற்ற பயிற்சி பெறுநரின் முதுகில் தட்டுகின்றார்.

## சமையலறையில் தொடர்பு கொள்வதற்கு பல்வேறு முறைகளை பயன்படுத்த அனுமதித்தல்




படம் 17: ஆண் காது கேளாத பயிற்சி பெறுநர் சமையலறையில் மற்றவர்களுடன் **கைச் சைகைகளைப்** பயன்படுத்தி தொடர்பு கொள்கிறார்.



படம் 18: ஆண் காது கேளாத பயிற்சி பெறுநர் சமையலறையில் உள்ள மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள, **பயிற்சியின் போது உருவாக்கப்பட்ட சைகைளின் பட்டியலைப் பயன்படுத்தி சமையல் நுட்பங்களின் நுணுக்கங்களை வெளிப்படுத்துகிறார்.**

## சமையலறைப் பணிகளைச் செய்வதற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தவதற்கு அனுமதீயுங்கள்.



படம் 19: பெண் காது கேளாத பயிற்சி பெறுநர் **தனது பணி நிலையத்தில்** (மணிக்குப் பதிலாக) இயக்கப்பட்ட **சிவப்பு கதில் சுட்டிக்காட்டி** மூலம், தயாரிப்பதற்கான புதிய ஆர்டர்கள் குறித்த விழிப்பூட்டல்களைப் பெறுகிறார்.



படம் 20: பெண் காது கேளாத பயிற்சி பெறுநருக்கு, அவளது உதவி தேவை என்று பணியாளர் ஒருவரிடமிருந்து செய்தி கிடைக்கிறது, (பேசுவதற்குப் பதிலாக கதிர் வெளிச்சத்தைத் **லைட்டரை தனது பணி நிலையத்தில்**) பயன்படுத்துகிறார்.



படம் 21: பெண் காது கேளாத பயிற்சி பெறுநர் தனது பணி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரு **சரி செய்யக்கூடிய சிறிய கண்ணாடியின்** மூலம், அவளுக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதைக் காண்கிறாள்.

## செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்கள்

### சமையல் தொடர்பான பணிகளைச் செய்ய பல்வேறு முறைகளைப் பயன்படுத்த அனுமதித்தல்





படம் 22: கையைப் பயன்படுத்துவதில் சிரமப்படுகின்ற பெண் பயிற்சி பெறுநர் தனது இடுப்பு அல்லது இடுப்புக்கு எதிராக கத்தியைப் பிடித்து வெட்டும் பணிகளைச் செய்கிறார்.





படங்கள் 23.1, 23.2: கையைப் பயன்படுத்துவதில் சிரமப்படுகின்ற பெண் பயிற்சி பெறுநர் பேஸ்ட்ரிகளைத் தயாரிக்கும் போது தனது முன்னங்கைகளில் பாத்திரங்களை வைத்திருக்கிறார்.



படம் 24: இடுப்பிற்குக் கீழ் செயற்பாட்டில் வரையறை உடைய பெண் பயிற்சி பெறுநர்(ஊன்றுகோல்களைப் பயன்படுத்தி) சமையல் பணிகளைச் செய்கிறார் - அவை வழக்கமாக நின்று செய்யப்படுபவை - சேணம் நாற்காலியைப் பயன்படுத்தி உட்கார்ந்த நிலையில், உட்கார்ந்திருப்பதற்கும் நிற்கும் நிலைக்கும் இடையில் மாற்றுவதன் மூலமும் பணிகளைச் செய்யலாம்.

## சமையலறைப் பணிகளைச் செய்வதற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியுங்கள்.










படம் 25: ஒரு கைச் செயற்பாடுகளில் வரையறை உடைய பயிற்சி பெறுநர் காய்கறிகளை எளிதில் வெட்டுவதற்கு **ரோலர் கத்தியைப்** பயன்படுத்துகிறார்.

படங்கள் 26.1, 26.2: ஒரு கைச் செயற்பாடுகளில் வரையறை உடைய பயிற்சி பெறுநர் காய்கறிகள், ரொட்டி மற்றும் பிற உணவுப் பொருட்களை வெட்ட **எளிதான பிடியில் கத்தியைப்** பயன்படுத்துகிறார்.







படங்கள் 27.1, 27.2, 27.3: ஒரு கையால் பயிற்சி பெறுநர் வெட்டுப் பணிகளை எளிதில் செய்ய ஏற்ற வகையில் **மாற்றியமைக்கப்பட்ட வெட்டுப் பலகையைப்** பயன்படுத்துகிறார் (காய்கறிகளை சீவும் போது அல்லது நறுக்கும் போது clamp, box grater, the steel spikes உதவும்).





படங்கள் 28.1, 28.2: கைச் செயற்பாடுகளில் வரையறை உடைய பயிற்சி பெறுநர் சமைக்கும்போது pan சறுக்குவதைத் தடுக்க pan holders ஐப் பயன்படுத்துகிறார்.



படம் 29: ஒரு பக்க கைச் செயற்பாடுகளில் வரையறை உடைய பயிற்சி பெறுநர் போத்தலை **ஒற்றைக் கையுடைய ஜாடி திறப்பானின்** (one-handed bottle opener.) உதவியுடன் திறக்கிறார்.





படங்கள் 30.1, 30.2: ஒரு பக்க கைச் செயற்பாடுகளில் வரையறை உடைய பயிற்சி பெறுநர் ஒரு பழப்பாகு போத்தலை **ஜாடி திறப்பானின்** உதவியுடன் திறக்கிறார்.

## *இடுப்பிற்கு மேல் செயற்பாட்டில் வரையறை உடைய பயிற்சி பெறுநர்கள்*




படம் 31: நீண்ட நேரம் நிற்க சிரமமுடைய சூடான பானங்களைத் தயாரிக்கும் பயிற்சி பெறுநர் (முதுகெலும்புச் சிக்கல் உடையவர்) மாற்றியமைக்கக் கூடிய சாய்வு நாற்காலியைப் பயன்படுத்தலாம். அது பாதி உட்காரவும் சாய்ந்திருக்கவும் வசதியாக இருக்கும் (பிடியுடன் அல்லது **பிடி இல்லாமல்/பின் சாயக் கூடிய**).



படம் 32: நீண்ட நேரம் நிற்கச் சிரமப்படும் பயிற்சி பெறுநர் (செயற்கைக்கால் பொருத்தியவர்) படியையுடைய சிறு கதிரையில் நின்றபடி சூடான பானங்களைத் தயாரிக்கிறார்.



படம் 33: நீண்ட நேரம் நிற்க சிரமமுடைய சமையலில் ஈடுபடும் பயிற்சி பெறுநர் (முதுகெலும்புச் சிக்கல் உடையவர்) சாய்வு நாற்காலியைப் பயன்படுத்தி (saddle chair) இலகுவாக சமையல் அறைக்குள் நகரவும் அமரவும் முடியும்.





படம் 34: **அடுப்புக் கண்ணாடி அல்லது சரி செய்யக்கூடிய கண்ணாடியைப்** பயன்படுத்தி, குறைந்த உயரமுள்ள பயிற்சி பெறுநர் பானைகள் மற்றும் பாத்திரங்களின் உள்ளிருப்பவற்றை எளிதாகக் கவனிக்க முடியும். சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுநர்களுக்கும் இது பொருத்தமானது.

படம் 35: உயரம் குறைந்த பயிற்சி பெறுநர் **இரண்டு-படியுடைய சிறு கதிரையைப்** ஜப் பயன்படுத்தி வேலை செய்யும் இடத்தை நெருங்கலாம்.

## அறிவுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள்

### தெளிவான மற்றும் எளிமையான மொழியையும், பயிற்சியின் போது பிருயோகிக்கப்படும் சொற்களையும் பயன்படுத்துங்கள்.




படம் 36: மதிப்பீட்டாளர் அறிவுறுத்தலை வழங்குகிறார்: *"தயவுசெய்து ரைட்டா மற்றும் சாலட்டுடன் ஒரு பிரியாணியைத் தயாரிக்கவும"*. அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநருக்கு அது புரியவில்லை




படம் 37: மதிப்பீட்டாளர் கேட்கிறார் *"நீங்கள் ரீட்டா மற்றும் சாலட்டுடன் ஒரு பிரியாணியை தயார் செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதற்காக, உங்களுக்கு தேவையான அனைத்து உணவுப்பொருட்களையும் உணவை சமைக்க தேவையான அனைத்து பாத்திரங்களையும் கருவிகளையும் வெளியே எடுக்க முடியுமா?"*

OR



படம் 38: மதிப்பீட்டின் போது மதிப்பீட்டாளர் தனது வினாக்களை எளிய மொழியிலும் மிகவும் நடைமுறை வழியிலும் கேட்கிறார்.




படம் 39: மதிப்பீட்டாளர் அறிவுறுத்தலை வழங்குகிறார்: *"தயவுசெய்து ரைட்டா மற்றும் சாலட்டுடன் ஒரு பிரியாணியைத் தயாரிக்கவும்"*.




படம் 40: பயிற்சியாளர் பயிற்சி பெறுநரிடம்: *"நீங்கள் ரைட்டா மற்றும் சாலட்டுடன் ஒரு பிரியாணியைத் தயாரிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். உங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் மேசையில் வைக்க முடியுமா?"*





படம் 41: பயிற்சியாளர் பயிற்சி பெறுநரிடம் கேட்கிறார்: *"அப்படியானால் உங்களுக்குத் தேவையான அனைத்து பாத்திரங்களையும் கருவியையும் கொண்டு வர முடியுமா?"*

## பயிற்சியின் போது, பயிற்சி பெறுநரை நிறக்-குறியீடு செய்யப்பட்ட கருவிகள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு அனுமதியுங்கள்.





படம் 42: அறிவுத்திறன் குறைபாடுடைய பயிற்சி பெறுநர் சாக்லேட் சிப் குக்கீகளை தயாரிப்பதற்குத் தேவையான திரவ மற்றும் உலர்ந்த பொருட்களை தயார் செய்கிறார், **நிறக்குறியிடப்பட்ட அளவிடும் கரண்டிகள் மற்றும் கோப்பைகளின்** மூலம் உதாரணம் 1 நீல கப் சர்க்கரை, 2 இளஞ்சிவப்பு கப் மா, 1 ஊதா கரண்டி பேக்கிங் சோடா போன்றவை..




படம் 43: அறிவுத்திறன் குறைபாடுள்ள பயிற்சி பெறுநர், பயிற்சியின் போது அவர் கற்றுக்கொண்ட நிறக் -குறியிடப்பட்ட செய்முறையுடன் நிறக் -குறியிடப்பட்ட அளவிடும் கரண்டி மற்றும் கோப்பைகளை பொருத்துவதன் மூலம் சொக்லேட், சிப்ஸ், குக்கீஸ்களை தயாரிக்கிறார்.



படம் 44:அறிவுத்திறன் குறைபாடுள்ள பயிற்சி பெறுநர் **நிறக் -குறியிடப்பட்ட கத்திகளைப்** பயன்படுத்துவதன் மூலம் கூர்மையான கத்திகள் போன்ற சாத்தியமான ஆபத்துக்களை அடையாளம் காண முடியும்.




படம் 45: அறிவுத்திறன் குறைபாடுள்ள பயிற்சி பெறுநர் பயிற்சியின் போது கற்றுக்கொண்ட **நிறக் குறியீட்டு வெப்பநிலை குறிப்பைப்** பயன்படுத்தி அடுப்பை முன்கூட்டியே சூடாக்க முடியும் (வண்ண-குறியீட்டு புள்ளி ஸ்டிக்கர்கள்): உதாரணம் . 150 பாகைக்கு மஞ்சள் புள்ளி, 200 பாகைக்கு வெள்ளை புள்ளி.

## சமையலைப் பாதுகாப்பாகவும் எளிதாகவும் மாற்றுவதற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியுங்கள்.





படங்கள் 46.1, 46.2: அறிவுத்திறன் குறைபாடுள்ள பயிற்சி பெறுநர் கைப் பாதுகாப்பான் கருவியைப் பயன்படுத்தி எந்தக் காயமும் ஏற்படாமல் காய்கறிகளை நறுக்குகிறார்.

## மதிப்பீட்டின் போது பயிற்சி பெறுநரை, எளிதாக நகரக் கூடியவாறு தனது வேலைத் தளத்தை அமைப்பதற்கு அனுமதியுங்கள்.




படம் 47: பயிற்சியாளரின் உதவியுடன், அறிவுத்திறன் குறைபாடுள்ள பயிற்சி பெறுநர் தனது வேலைத் தளத்தின் அனைத்து நிறக்-குறியிடப்பட்ட உபகரணங்கள் மற்றும் கருவிகளையும் பயிற்சியின் போது இருந்த அதே இடத்தில் வைத்துக் கொள்கிறார். மதிப்பீட்டின் போது இது அவருக்கு வசதியாக இருக்கிறது.

## ஆங்கிலத் தகவல் தொடர்புக்கு, பயிற்சியின் போது கற்பிக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களை முடிந்தவரை பயன்படுத்துங்கள்.



படம் 48: பயிற்சியின் போது பயிற்சிப் பெறுநருக்குக் கற்பிக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களின் பட்டியலும் படங்களும் காணப்படுகின்றன. மதிப்பீட்டின் போது அவர் சில படங்களைச் சுட்டிக்காட்டி, பயிற்சி பெறுநரை அவற்றை ஆங்கிலத்தில் சொல்லுமாறு கேட்கிறார்.











